Registerd as a News Paper பக்கங்கள் 10 விலை: ரூபா 6-00

Y.M.C.A

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம் 04 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 4 [18-06-93] வெள்ளிக்கிழமை ஓசை 120

## பாதிக்கப்பட்டோருக்கு ஆசிரியர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களை அண்டிவாழ்வோரும் பயிலுனர் ஆசிரியர் நியமனங்களைக் கோரலாமென கல்விச் சேவை சபை அறிவித்துள்ளது. இதன்படி 13-7-1989 ஆம் திகதி வர்த்தமானி விளம்பரத்தின்படி பயிலுனர் ஆசிரியர் நியமனத்திற்கு விண்ணப்பித்து நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்து பயிலுனர் ஆசிரியர் நியமனம் பெறாதோர் உடனடியாக யாழ். பிரதேச கல்வித் திணைக்கள ஆசிரியர் நிர்வாகக் கிளையுடன் நேரடியாகத் தொடர்பு (10ஆம் பக்கம் பார்க்க)

# யுத்தக் கைதிகளின் உறவினர் 77 பேர் இன்று யாழ். வருவர்

## இரு தினங்கள் தங்குவர்

(கொழும்பு)

யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள 38 சிங்களப் பொலிஸாரினதும், ஓர் இராணுவச் சிப்பாயினதும் 77 உறவினர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளனர் கொழும்பிலிருந்து பஸ் வண்டி மூலம் திருமலை நேற்று மாலை வந்தடைந்த இவர்கள், நேற்றிரவு அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறை பயணமானார்கள். யாழ். வரும் இவர்கள் இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர்.

இவ் யுத்தக் கைதிகளின் உறவினர்களில் 72பேர் நேற்றுக்காலை கொழும்பிலிருந்து பஸ்மூலம் திருக்கோணமலையை நேற்றிரவு வந்தடைந்தனர் எனவும் நேற்றிரவு பத்து மணியளவில் 77 உறவினர்களும், மொழி பெயர்ப்பாளர்கள் இருவரும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவரும் 'நரோமா' கப்பல் மூலம் புறப்பட்டு இன்று காலை 9-00 மணியளவில் பருத்தித்துறையை வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று பகல் யுத்தக் கைதிகளை இவர்கள் சந்திப்பர் எனவும் இரண்டு தினங்கள் இங்கு தங்கியிருந்தபின் சனிக்கிழமை மாலை இங்கிருந்து புறப்பட்டுச் செல்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு வரவுள்ள உறவினர்களின் 77 பேருடைய பெயர்கள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## உறவினர் முகத்தை பார்ப்போமா?

### யுத்தக் கைதிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

"நாம் எல்லோரும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். நாங்களாக எழுந்து எமது தேவைக்காக நடக்க முடியாமல் உள்ளது. எமது தாய் தந்தையர் நாளை வருவார்கள் என்று செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அறிகின்றோம். அவர்கள் வரும்போது அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கும் அவர்களது முகத்தைப் பார்ப்பதற்கும் கூட எங்களால் முடியுமோ தெரியாது" இவ்வாறு சாகும்வரை உண்ணா விரதம் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகள் நேற்று 'புலிகளின் குரல்' (10ஆம் பக்கம் பார்க்க)

## ஊரடங்கு அமுல்

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நேற்றுக் காலை ஆறு மணி முதல் மறு அறிவித்தல்வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## வீரச்சாவு

## புதிய இராணுவ நடவடிக்கை வடக்கில் இடம் பெறும்

லஞ்சக் குற்றச்சாட்டை அடுத்து

## ஜனாதிபதி சர்மா-ராவ் அவசர சந்திப்பு

பம்பாய் பங்கு சந்தை மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்ட ஹர்சத்மேத்தா பிரதமர் நரசிம்மராவுக்கு லஞ்சப் பணம் வழங்கியதாக வெளியான செய்திகளை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பான நிலை காணப்படும் பின்னணியில் நேற்றுக் காலை பிரதமர் நரசிம்மராவ் ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மாவை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்தார். இவர்களின் சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தன. சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை இந்திய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியின் செயற்குழு பிரதமர் திரு. நரசிம்மராவ் மீது பூரண நம்பிக்கை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது

## தமிழரை துன்புறுத்துவதாக சர்வதேசம் ஏற்கவில்லை

விமல் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பிலுள்ள தமிழரை துன்புறுத்தவோ, கைது செய்யவோ அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது என பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார். அவசர காலசட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களை அரசாங்கமோ, அரச படைகளோ துன்புறுத்துவதாக சர்வதேச அமைப்புகளோ, நீதிபதிகளோ வெளிப்படையாக ஏற்கவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## அரசின் பொருளாதார தடை சிக்கலாக்கும் நடவடிக்கை

கென்னத் பெர்னாண்டோ தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குகிழக்குதமிழ்மக்களின் குறைபாடுகளை நியாய பூர்வ பேஸ் டெரஸ் தேவாலயத்தில் நடைபெற்ற மத வைபவமொன்றில்

# ஜனாதிபதி சர்மா-ராவ் அவசர சந்திப்பு

பம்பாய் பங்கு சந்தை மோசடியில் குற்றஞ்சாட்டப்பட்ட ஹர்சத்மேத்தா பிரதமர் நரசிம்மராவுக்கு லஞ்சப் பணம் வழங்கியதாக வெளியான செய்திகளை அடுத்து ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பான நிலை காணப்படும் பின்னணியில் நேற்றுக் காலை பிரதமர் நரசிம்மராவ் ஜனாதிபதி சங்கர் தயாள்சர்மாவை அவரது உத்தியோக பூர்வ இல்லத்தில் சந்தித்தார். இவர்களின் சந்திப்பு 45 நிமிடங்கள் நீடித்தன. சந்திப்பின் போது பேசப்பட்ட விடயங்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை.

இதேவேளை இந்திய ஆளும் கட்சியான காங்கிரஸ் கட்சியின் செயற்குழு பிரதமர் திரு. நரசிம்மராவ் மீது பூரண நம்பிக்கை தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறது

# தமிழரை துன்புறுத்துவதாக சர்வதேசம் ஏற்கவில்லை

### விமல் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பிலுள்ள தமிழரை துன்புறுத்தவோ, கைது செய்யவோ அவசரகாலச் சட்டம் பயன்படுத்தப்படமாட்டாது என பாராளுமன்ற விவகார அமைச்சர் விமல் விக்கிரமசிங்க தெரிவித்தார். அவசர காலசட்டத்தை மேலும் ஒரு மாதம் நீடிக்கும் பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

தமிழ் மக்களை அரசாங்கமோ, அரச படைகளோ துன்புறுத்துவதாக சர்வதேச அமைப்புகளோ, நீதிபதிகளோ வெளிப்படையாக ஏற்கவில்லை என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# அரசின் பொருளாதார தடை சிக்கலாக்கும் நடவடிக்கை

### கென்னத் பெர்னாண்டோ தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குகிழக்குதமிழ்மக்களின் குறைபாடுகளை நியாய பூர்வமான முறையில் தீர்ப்பதை விடுத்து இப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கும் நடவடிக்கையே இப்பொழுது மேற்கொள்ளப்படுகிறது. மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய பொருள்கள் மீது தடைகளை ஏற்படுத்தி அவர்களுக்கு இன்னல்களைஏற்படுத்துவதன் மூலம்இப்பிரச்சினைக்குத்தீர்வு ஏற்படப் போவதில்லை.

இவ்வாறு கொழும்பு கோல் பேஸ் டெரஸ் தேவாலயத்தில் நடைபெற்ற மத வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய ஆங்கிலத் திருச்சபை ஆயர் கென்னத் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் அந்த தெரிவிக்கையில; தமிழ் மக்கள் இன்று பல இன்னல்களை அனுபவித்து வருகின்றனர். அவர்களின் நிலை மிகவும் வேறுபட்டதாக உள்ளது. அவர்களுக்கு நாம் எம்மால் இயன்ற உதவிகளைச் செய்ய முன்வர வேண்டும் என்றார்.

# மன்னார் பகுதியில் விமான தாக்குதல்

### மூன்றுதடவைகள் நடாத்தின

(மன்னார்)

சிறிலங்கா விமானப்படையின் புக்காரா மற்றும் சியாமாச் செட்டி ரக குண்டுவீச்சு விமானங்கள் மன்னார் மாவட்டத்தின் பல பகுதிகளிலும் பரவலாக குண்டுவீச்சுத் தாக்குதல்களை நேற்றுக் காலை மேற்கொண்டன.

நேற்றுக்காலை 6 மணியளவில் மன்னார் முள்ளிக்குளம் பகுதி கடற்கரையை மையமாகக் கொண்டு வட்டமிட்ட இரண்டு புக்காரா குண்டு வீச்சு விமானங்கள் இரண்டு குண்டுகளை வீசின. இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

மீண்டும் காலை 8 மணியளவில் முருங்கன் மருதமடு கிராமத்தை மையமாகக் கொண்டுவட்டமிட்ட இரண்டு குண்டு வீச்சு விமானங்கள்

(10ஆம் பக்கம் பார்க்க)

# இரு தினங்கள் தங்குவர்

(கொழும்பு)

யுத்தக் கைதிகளாகப் பிடிக்கப்பட்டு விடுதலைப் புலிகளின் காவலிலுள்ள 38 சிங்களப் பொலிஸாரினதும், ஓர் இராணுவச் சிப்பாயினதும் 77 உறவினர்கள் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேரவுள்ளனர் கொழும்பிலிருந்து பஸ் வண்டி மூலம் திருமலை நேற்று மாலை வந்தடைந்த இவர்கள், நேற்றிரவு அங்கிருந்து கப்பல் மூலம் பருத்தித்துறை பயணமானார்கள். யாழ். வரும் இவர்கள் இரு தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருப்பர்.

இவ் யுத்தக் கைதிகளின் உறவினர்களில் 72பேர் நேற்றுக்காலை கொழும்பிலிருந்து பஸ்மூலம் திருக்கோணமலையை நேற்றிரவு வந்தடைந்தனர் எனவும் நேற்றிரவு பத்து மணியளவில் 77 உறவினர்களும், மொழி பெயர்ப்பாளர்கள் இருவரும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி ஒருவரும் 'நரோமா' கப்பல் மூலம் புறப்பட்டு இன்று காலை 9-00 மணியளவில் பருத்தித்துறையை வந்தடைவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

இன்று பகல் யுத்தக் கைதிகளை இவர்கள் சந்திப்பர் எனவும் இரண்டு தினங்கள் இங்கு தங்கியிருந்தபின் சனிக்கிழமை மாலை இங்கிருந்து புறப்பட்டுச் செல்வர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இங்கு வரவுள்ள உறவினர்களின் 77 பேருடைய பெயர்கள் விடுதலைப் புலிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# ஊரடங்கு அமுல்

மன்னார், வவுனியா மாவட்டங்களில் நேற்றுக் காலை ஆறு மணி முதல் மறுஅறிவித்தல்வரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# உறவினர் முகத்தை பார்ப்போமா?


### யுத்தக் கைதிகள் கவலை

(யாழ்ப்பாணம்)

"நாம் எல்லோரும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளோம். நாங்களாக எழுந்து எமது தேவைக்காக நடக்க முடியாமல் உள்ளது. எமது தாய் தந்தையர் நாளை வருவார்கள் என்று செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அறிகின்றோம். அவர்கள் வரும்போது அவர்களைச் சந்தித்துப் பேசுவதற்கும் அவர்களது முகத்தைப் பார்ப்பதற்கும் கூட எங்களால் முடியுமோ தெரியாது" இவ்வாறு சாகும்வரை உண்ணா விரதம் இருக்கும் சிங்கள யுத்தக் கைதிகள் நேற்று 'புலிகளின் குரல்'

(10ஆம் பக்கம் பார்க்க)

# வீரச்சாவு



லெப். பத்மசீலன் (மனோ)

பூநகரிப்பகுதியில் உள்ள சறுக்காய் தீவில் கடந்த 15-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த லெப்டினன்ட் பத்மசீலன்/மனோ (அழகையா காந்தரட்ணம்- புன்னைக்குடா வீதி தளவாய் ஏறாவூர், மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றனர்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# புதிய இராணுவ நடவடிக்கை வடக்கில் இடம் பெறும்

### இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடமாகாணத்தில் புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றிற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இதற்காக மன்னார், வவுனியா மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் அமுல் நடத்தப்பட்டிருப்பதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் நளின் அங்கமன நேற்று செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவித்த இவர் இது தொடர்பாக மேலதிக தகவல் எதனையும் தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இதேவேளை வேறு செய்திகளை ஆதாரம் காட்டி இவ் இராணுவ நடவடிக்கையானது செட்டிக்குளம் இராணுவ முகாம் பகுதியில் இடம் பெறலாம் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

# கப்பல்மூலம் பயணம் செய்ய புதிய கட்டுப்பாடுகள் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

செயலக உத்தியோகத்தர்கள் கப்பல் மூலம் கொழும்பு செல்வதாயின் அவர் உத்தியோக பூர்வமாக செல்பவராக இருக்க வேண்டும் எனவும் அவருடன் அவரது குடும்ப உறுப்பினர் யாரும் செல்ல முடியாது எனவும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக யாழ். செயலகத்திற்கு கொழும்பிலிருந்து வந்த தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இதன்படி இனிமேல் செயலகத்தில் இருந்து கப்பல் மூலம் செல்வதற்கு உத்தியோகபூர்வமாக செல்பவர்களை மட்டுமே அரசாங்க அதிபர் சிபார்சு செய்ய முடியும். இதுவரை பரீட்சைக்காக கொழும்பிற்கு அவசரமாகச் செல்ல வேண்டியவர்களையும் மற்றும் அவசர தேவைகளுக்காகச் செல்பவர்களையும் அரசாங்க அதிபர் சிபார்சு செய்து வந்தமை தெரிந்ததே.

இதேவேளை பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திலிருந்தும் யாழ். போதனா வைத்தியசாலை,வங்கி போன்றவற்றிலிருந்தும் செல்வதற்கு மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையினரே கப்பல் மூலம் கொழும்பு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை கிறிஸ்தவ இந்து மதகுரு

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மீரா பிரசுரங்கள்**

நாளைய சந்ததிக்காக இன்றைய இலக்கியங்கள்... 'மீண்டும் புதிதாய்ப் பிறப்போம், விண்ணில் அல்ல விடிவெள்ளி, அக்கினி, சுவடுகள், வெள்ளை யடிக்கப்பட்ட கல்லறை'' விற்பனையாகின்றது. யாழ்ப்பாணம், சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, கிளிநொச்சி புத்தகசாலைகளில். (5166)

**சோதிடம்**

உங்கள் எதிர்காலம் பற்றி சிந்திக்கும் நேரத்தில் சந்தித்துப் பாருங்கள். இருபது வருட சோதிட அனுபவசாலி வேலணை சோதிடர் V.A சிவராசா 152B, அரசடி றோட் கந்தர்மடம் யாழ்ப்பாணம். (5172)

**விற்பனைக்கு**

பாவித்த நல்ல நிலையில் உள்ள National Rx5030, National Rx1822, Mini Two in One Set, (Mw Sw. Fm) Sansui Integrated Amplifier, ஆண், பெண் இருபாலாருக்கும் ஏற்ற CITIZEN, SEIKO ஒட்டோமெற்றிக் கைகடிகாரங்கள் மிககுறைந்த விலையில் தரமானவையாக பெற்றுக் கொள்ளலாம். டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ் 284 ஸ்ரான்லி வீதி, யாழ்பபாணம். (சி 6838)

**சனிவக்கிரசஞ்சாரம்**
(4½ மாதம்)

இராசிபலன்களும், (சத்யாவின்) கைரேகை சாஸ்திரமும் ரூ8 50 விற்பனையாகின்றது. மசமிலன், பூபாலசிங்கம் புத்தகச லைகள் யாழ்ப்பாணம், ராணிக்கமிக்ஸ், இந்திய சஞ்சிகைகள் விற்பனைக்குண்டு அமமா புத்தகசாலை51 அரசடி வீதி யாழ்ப்பாணம்.(5169)

**உதிரிப்பாகங்களுக்காக சகல மணக்கூடுகள், றேடியோக்கள்**

நல்ல நிலையில உள்ள எலக்ரோனிக், ஒட்டோமற்றிக், வைன்டிங் சுவர், மேசை மணிககூடுகள், றேடியோக்கள் உதிரிப்பாகங்களுககாக வாங்கப்படும். டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ் 284, ஆரியகுளம் சந்தி. ஸ்ரான்லி வீதி, யழ்ப்பாணம் (சி-6733)

## புதிய பயிற்சி நெறிகள்

SHORT HAND & TYPING
தமிழ் - ஆங்கிலம்

- கேக் ஐசிங்
- பூ வேலைகள்
- சிகை அலங்காரம்

விபரங்களுக்கு:
NORTH CEYLON TECHNICAL INSTITUTE (BRANCH)

சிறுப்பிட்டி வடக்கு,
நீர்வேலி.
(சி-6858)

## முத்திரைகள் வந்தன

[யாழ்ப்பாணம்]

யாழ் பிரதான தபாலகத்திற்குத் தேவையான போதுமான அளவு முத்திரைகள் இம்முறை எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ் தபாலக அதி

# VACANCY

## POST OF TYPIST / SECRETARY

Applications are invited from females residing within 4 miles from Jaffna Town.

Qualifications

(i) Below 30 years
(ii) G. C. E (A/L) with credit pass in Mathematics/ Arithmetic
(iii) English Typing speed 30 w p m. A Knowledge of English and Accounts will be considered additional qualifications.

Apply on or before 25th June 1993.

Personnel Officer:
TASTE LINE INDUSTRIES (PVT) LTD
14, Seenier Lane, Jaffna.
(சி-6859)

## வாழ்த்தி வணங்குகிறோம்

அதிவணக்கத்திற்குரித்தாகும்
**கலாநிதி சு. ஜெபநேசன்**
அவர்கள்

தென் இந்தியத் திருச்சபையில் திகழும் முத்து பேராயத் திருநிலையில் அமர்ந்த சொத்து எங்கள் கல்லூரியின் இளைய மொட்டு எண்ணுகின்றோம் வாழ்த்துகின்றோம் அடியைத் தொட்டு.

வாழ்த்துவது:
யா/ சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி
அதிபர், ஆசிரியர், ஊழியர் சங்கம். (5054)

1993ஆம் ஆண்டு பெரும்போகத்திற்கான
## விதைநெல் பெறல்

யாழ்.மாவட்ட விவசாயிகள் அவ்வப்பகுதி கமநலசேவை நிலையங்களுடன் தொடர்புகொண்டு விதைநெல் புசல் ஒன்றிற்கு ரூபா 200/- வீதம் முற்பணம் செலுத்துவதுடன், தமககுத் தேவையான தொகை, வகை என்பவற்றையும் பதிவுசெய்யலாம். மீதித் தொகை தீர்மானிக்கப்படும் விலைக்கு ஏற்ப கொள்வனவின்போது செலுத்தப்பட வேண்டும் எனவும் அறியத்தருகிறேன்.

ஆ. சிவசுவாமி,
சிரேஷ்ட கமநலசேவை உதவி ஆணையாளர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

கமநலசேவைகள் திணைக்களம்,
யாழ்ப்பாணம், 1993. 06. 17. (சி-6857)

## எச்சக்காய் கராட்டி

சிகன் உஷ்யினியிடம் இந்தியாவில் பயிற்சி பெற்று ஓராம் கறுப்புப்பட்டி (பெலிற்) பெற்ற மாஸ்ரர் இராயு (தாளையடி) என்பவரால் உஷானிஸ் இன்ரநஷனல் எச்சக்காய் கராட்டியின் மாணவர் தேர்வு நடைபெற்று பெலிற் கொடுக்கப்படும். நடைபெறும் இடம் பண்டிதர் குடியிருப்பு — கிளாலி. காலம்: 19-06-1993. நேரம்: காலை 6 மணி — மாலை 5-00 மணி வரை. மாணவர் பயிற்சி பெறும் இடங்கள்: பளை, உடுத்துறை, பருத்தித்துறை. கிளாலி, சாவகச்சேரி.

(5168)

யாழ்ப்பாணம் வண். கிழக்கு கந்தர்மடம் பழம்வீதி,
ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய
## வருடாந்த இரதோற்சவம்

காலம்: 18-06-93 வெள்ளிக்கிழமை (இன்று) பகல் 10 மணிக்கு அபிஷேகம். வசந்த மண்டப பூஜை மாலை 4-30மணிக்கு நடைபெற்று விநாயகப்பெருமான் 5-30 மணிக்கு இரதத்தில் காட்சி தருவார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பிரதமகுரு: வை. கருணாகரேஸ்வரக் குருக்கள்.
(5171)

## நினைவு கூருகின்றோம் ... 1993-06-18

1986ஆம் ஆண்டு இதே தினத்தில் தமிழீழக் கடற்பரப்பில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**விசாகன்** (சின்னத்தம்பி ராஜு - கல்லடி - மட்டு)
**தேவராஜ்** (இன்சான்ட் சில்வெஸ்ரர் ஆனந்த லெம்பேட் பெரியபண்டி விரிச்சான், மடுக்கோயில் - மன்னார்)
**சூரி** (வேலுப்பிள்ளை ரவி - அரசர்கேணி - பளை)
**லெப். ரவியப்பா** (சோதிலிங்கம் யோகலிங்கம் – சுங்கலாகா ஒழுங்கை, திருவில்-வல்வெட்டித்துறை)
**2–ம் லெப். மணிமாறன்** (கதிரிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் - சிவபுரவீதி, திருவில்-வல்வெட்டித்துறை)
**2-ம் லெப். ஆனந்தப்பா** (கந்தசாமி சண்முகானந்தம் - காட்டுப்புலம், தொண்டமானாறு - யாழ்)
**2–ம் லெப் ரகீம்மாஸ்ரர்** (தம்பையா கிருஷ்ணமூர்த்தி-விந்தனை - வல்வெட்டித் துறை)
**2–ம் லெப். அலிப்** (சிறிஸ்கந்தராஜா - பாஸ்கரன்- ஆதிகோவிலடி - வல்வெட்டித்துறை)
**சித்தப்பா** (சின்னத்துரை கணேசதாசன் - அராலிமேற்கு, வட்டுக்கோட்டை - யாழ்.)
**சேரன்** (சரவணமுத்து சிறீசர்வானந்தா - திருவில்-வல்வெட்டித்துறை)
**சியாம்/ஜியாப்** (அந்தோனிப்பிள்ளை யேசுராசா-3-ம்குறுக்குத்தெரு - பருத்தித்துறை)
**ஞானி** (சிவசுப்பிரமணியம் கஜேந்திரமூர்த்தி - பொன்னாதோட்டம், பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை)

இதே சம்பவத்தின் போது கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான;
**பிக்கப்ரவி** (- - வல்வெட்டித்துறை)

1987ஆம் ஆண்டு திருமலை - சூடைக்குடாப் பகுதியில் சிறிலங்காப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வீரச்சாவெய்திய-
**லெப். கார்த்திக்** (ஐயாத்துரை சிறிகரன் - 7-ம் வட்டாரம் சம்பூர் - திருமலை)

1989ஆம் ஆண்டு யாழ்- கொல்லங்கலட்டிப் பகுதியில் தேசவிரோத சக்திகளினாற் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1990ஆம் ஆண்டு எதிர்பாராத விதமாக துப்பாக்கி வெடித்ததில் எமைப்பிரிந்த-
**ஜினேந்திரன்** (- - இருதயபுரம் - மட்டு)

வவுனியா - வைரவப் புளியங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரின் போது வீரச்சாவெய்திய-
**மஜித்** (முகமது இஸ்காக் சூப்ஷேக்அரி - மீராவோடை - மட்டு)
**இளங்கோ** (- - திருமலை)
**மேஜர் தயாபரன்** (கனகசபை சிறிதரன் - இராஜேந்திரன் குளம் - வவுனியா)

கொக்காவில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-
**நிர்மலன்** (கந்தையா ரமேஸ்கந்தராசா-முரசுமோட்டை-கிளிநொச்சி)

அம்பாறையில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மத்தியமுகாம் 4ம் குடியிருப்புப் பகுதியைச் சேர்ந்த 2 தமிழிளைஞர்கள்.

மட்டுநகரில் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானத்தாக்குதலில் கொல்லப்பட்ட வாழைச்சேனை-கண்ணகிபுரத்தைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்

திருமலை-சீனன்குடாப் பகுதியில் சிறிலங்காப்படையினரால் வெட்டிக் கொல்லப்பட்ட 80க்கு மேற்பட்ட தமிழர்கள், மற்றும் 13ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 2தமிழர்கள்

1991ஆம் ஆண்டு மன்னார்-மடுவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச் சமரின் போதுவீரச்சாவெய்திய-
**அசோகன்** (சதாசிவம் பாலகுமார்-முனைத்தீவு - பெரிய போரதீவு-மட்டு)

வவுனியா-குருக்களூரில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடிச்சமரின்போது வீரச்சாவெய்திய-
**2–ம் லெப். கஸ்ரோ** (குமாரலிங்கம் விமலராசா - 4ம் கட்டை, அலம்பில், மணலாறு)

1992ஆம் ஆண்டு ஆனையிறவுப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வெடி விபத்தில் எமைப் பிரிந்த-
**மதிவண்ணன்/மணிவண்ணன்** (வேலாப்போடி ஜீவரத்தினம்-மண்டபத்தடி, 3ம்குறிச்சி கன்னாய்க்குடா-மட்டு

யாழ்-மண்டைதீவிலிருந்து சிறிலங்கா இராணுவத்தினர் ஏவிய எறிகணை வீழ்ந்து வெடித்ததில் வீரச்சாவெய்திய-
**கப்டன் சந்தியா** (யோகேஸ்வரி தேசிங்கம்-லட்சுமிஇல்லம் கரணவாய் மேற்கு, இமையாணன்-உடுப்பிட்டி-யாழ்)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/6855)

# சீதன விவாதம்: ஏன் இந்த மௌனம்?

சீதனம் பற்றிய விவாதத்தை மிகவும் உன்னிப்பாக படித்துவரும் வாசகன் என்ற ரீதியில் இந்த விவாதம்பற்றி எனது தனிப்பட்ட மதிப்பாய்வை முன்வைக்கவிரும்புகிறேன்.

சீதனம் பற்றிய பிரச்சினையை பலர் பல கோணங்களில் பார்த்திருக்கிறார்கள். ஆனால் எவருமே முழுமையாக இப்பிரச்சினையை அணுகியதாகத் தெரியவில்லை. சீதனப் பிரச்சினையால் பாதிக்கப்படுவது யார்? இது எங்கிருந்து, எப்படி, ஏன் தோற்றம் கொண்டது? இது ஒரு குடும்ப பிரச்சினையா, வர்க்கப் பிரச்சினையா, சமூகப்பிரச்சினையா? இதுபோன்ற கேள்விகளை ஆராய்ந்து பார்ப்பதில்தான் விவாததின் பெரும்பகுதி விரையமாகியிருக்கின்றது. வேறு சிலர் சீதனப் பிரச்சினையை ஒழிப்பதற்கு ஆலோசனைகள் வழங்கியிருக்கிறார்கள். காதலை ஊக்குவிக்கவேண்டும், சமுதாயத்தை மாற்றியமைக்க வேண்டும், சட்டத்தை கொண்டுவரவேண்டும், கலாசாரப் புரட்சியை நடத்த வேண்டும் என்ற ரீதியில் பல்வேறு பரிந்துரைகளை வழங்கியிருக்கிறார்கள். ஒரு சிலர் சீதனத்தை ஆதரித்தும் எழுதியிருக்கிறார்கள். பெண்ணின் முதலீடு இருந்தால்தான் குடும்பம் நடத்த முடியும் என்று மிகவும் பிற்போக்கான கருத்துக்களையும் முன்வைத்திருக்கிறார்கள். இன்னொருவர் ''தலைவிதியில்'' நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுவதாக புராணகாலத்துகதையைச் சொல்லியிருக்கிறார். இப்படியாக விவாத மேடை நகைச்சுவையாகவும், இடைக்கிடையே 'சீரியஸாகவும்' பரவலாக அபத்தமாகவும் அமைந்திருக்கிறது என்பதே எனது கருத்து.

இந்த விவாத அரங்கில் பெண்ணிலைவாதக் கருத்துக்கள் ஆணித்தரமாக எடுத்துச் சொல்லப்படவில்லை. சீதனமுறைமை என்பதுஒரு பெண் ஒடுக்குமுறை வடிவம் என்பதை சமூகவியல் கண்ணோட்டத்துடன் இதுவரை எவராவது எடுத்து விளக்கவில்லை. ஒருசில பெண் எழுத்தாளர்களின் ஆக்கங்கள் வெளிவந்தபோதும் அவற்றில்கருத்தாழத்தைக் காணமுடியவில்லை. பிரச்சினையை பெண்ணிய நோக்கில் (Feminist Perspective) தெளிவாக, ஆழமாக விளக்காமல் சீதன தடைச்சட்டம் வேண்டுமென இவர்கள் முன்வைக்கும் கருத்துகள் நுனிப்புல் மேய்ச்சலான பார்வையாக அமைந்துள்ளன. சீதனம் வாங்குவது ஆண்மையின் ஆளுமைக்கு இழுக்குத் தேடும் செயல் என ஒரு பெணமணி வாதாடுகிறார். இந்தப் பார்வையில் ஆண்நிலைவாதம்தான் மேலோங்கி நிற்கிறது என்பதை அவர் புரிந்துகொள்ளவில்லைப் போலும். பெண்கள் ஆயுதமேந்திப் போராடும் ஒரு புரட்சிகர சூழலில் பெண்நிலைவாத கருத்துநிலையில் ஏன் இந்த வறுமை ஏற்பட்டதோ தெரியவில்லை.

அனேகமாக ஓய்வுபெற்ற ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரு சில அநாமதேய எழுத்தாளர்களும் இந்தப் பிரச்சினை பற்றி எழுதியிருக்கிறார்கள். சொந்த அனுபவம் என்றும் நடப்பியல் எதார்ததம் என்றும் இவர்கள் முன்வைக்கும் கருத்துகள் சன ரசனையை ஏற்படுத்திய பொழுதும் பிரச்சினையை தீர்க்கமாக அணுகவில்லை. பாதிக்கப்படுபவர்கள் யார், பயனடைபவர்கள் யார் என்ற வகையில் ஒருவரை ஒருவர் விமர்சித்துகருத்துப்போர் நடைபெற்றுள்ளதே தவிர பிரச்சினையை ஆழமாக அலசிப் பார்க்கும் புலமை இவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. எந்தவித உருப்படியான தீர்வையும் இவர்கள் முன்வைக்கவில்லை. காதலுறவுக்கு சுதந்திரம் வழங்கிவிட்டால் சீதனத் திருமணங்கள் ஒழிந்துவிடும் என்பது சிலரது கருத்து. ஏதோ யாழ்ப்பாணத்தில் காதலுணர்வு செத்துப்போய்விட்டது என இவர்கள் எண்ணுகிறார்கள் போலும். ஆனால் இங்கு காதல் மலிந்துபோய்க் கிடக்கிறது. இந்தக் காதல் எல்லாம் திருமணத்தில் போய் முடிகிறதா என்பதுதான் கேள்வி. திருமணத்தில் முடிந்த காதல் உறவுகளும் சீதனப் பிரச்சினையிலிருந்து விடுபட்டுள்ளனவா என்பதும் கேள்விக் குறிதான். மேற்குலக காதல் சுதந்திரத்தை சிலர் உதாரணமாகக் கொள்கின்றனர். இந்தக் ''காதல் சுதந்திரம்'' எந்த அளவிற்கு விபரீத கோலங்கள் கொண்டுள்ளன என்பதோ, அல்லது தாம்பத்திய உறவுகள் சிதைந்து, திருமணங்கள் எந்த அளவுக்கு முறிந்து வருகின்றன என்பதோ இவர்களுக்கு தெரியாது போலும். காதல் என்பது பாலெழுச்சியின் தோற்றப்பாடான ஓர் உணர்ச்சிநிலை என்பதால் அது எல்லா மனித சமூகங்களிலும், எல்லா மனிதர்களையும் ஆட்டிப் படைக்கிறது. ஆயினும் அது பண்பாட்டு உலகத்தால் பண்படுத்தப்பட்டு தாம்பத்திய அன்புறவிற்கு அத்திவாரமாக அமையும்பொழுதுதான் அது மகத்துவம் பெறுகிறது. இனக் கவர்ச்சியின் அப்பட்டமான உணர்ச்சிவெளிப்பாடாக தோற்றம் கொள்ளும் காதலுக்கும், இல்லறவாழ்வின் இதயமாக அமைந்துவிடும் காதலுக்கும் வேறுபாடு உண்டு. திராவிடர் பண்பாடு இல்லற வாழ்வுக்கு நிறைவு தரும் அன்புறவாகவே காதலை கௌரவிக்கிறது.

காதலை ஊக்குவித்து சீதனத்தை விரட்டிவிடலாம் என எண்ணுவது தவறு. சீதனத்தைஒழித்து விட்டால் தான் உண்மையான காதலுறவு, அதாவது தாம்பத்திய வாழ்வுக்கு ஆதாரமான காதலுறவு தோற்றம் கொள்ள வாய்ப்புண்டு.

சீதனம் ஒழிந்து போவதற்கு சமுதாயம் மாறவேண்டும் எனசிலர் எழுதுகிறார்கள். ஆனால் சமுதாய மாற்றம் என்றால் என்ன என்ற தெளிந்த பார்வையுடன் இவர்கள் இந்தக் கருத்தைக்கூறுவதாக தெரியவில்லை. சமூதாய மாற்றம் என்றால் பழைய சமூக உறவுகள் ஒழிக்கப்பட்டு புதிய சமூக உறவுகள் கட்டி எழுப்பப்படுவதையே குறிக்கும். எமது சமூகத்தின் பொருளாதார உற்பத்தி வடிவம், பொருள் உற்பத்தி உறவுகள், சாதியக் கட்டமைப்பு, அதன் உறவுமுறை என்பன போன்ற எமது சமூக வாழ்வின் அடிப்படைகளை ஆழமாகப் பார்க்காமல் மேலெழுந்தவாரியாக சமூக மாற்றம் எனக் கோருவது சிறுபிள்ளைத்தனமானது. அத்துடன் நிலநிதர்சனத்தையும் நாம் பார்க்க வேண்டும். இங்கு ஒரு விடுதலைப் போர் நடந்துகொண்டிருக்கிறது. எமது தாயகப் பூமியை மீட்டெடுத்து ஒரு தனியரசை நிறுவ நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். எமது இலட்சியம் நிறைவேறி, ஆட்சியதிகாரம் எமது கைக்கு வரும் பொழுதுதான் அடிப்படையான சமூக மாற்றம்பற்றி நாம் சிந்திக்கலாம்.

அந்தக் காலம் வரை நாம் காத்திருக்க தேவையில்லை. இப்பொழுதுள்ள புரட்சிகர சூழ்நிலையில், எமது கட்டுப்பாட்டின் கீழுள்ள பிரதேசத்தில் சமூக சீரமைப்பு வேலைகளை நாம் மேற்கொள்வது சாத்தியம். இந்தச் சந்தர்ப்பத்தில் சட்டம்மூலம் சீதனத்தை ஒழித்துக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்என சிலர் யோசனை தெரிவித்திருக்கிறார்கள். இந்த சட்டவாக்க நடவடிக்கை சம்பந்தமாக இதுவரையும் எவரும் ஆக்கபூர்வமான கருத்துக்களைதெரிவிக்காதது விசனத்திற்குரியது.

தனியார்சொத்துடமை, சாதியம், சீதனம், பெண்ணடிமைத்தனம் போன்றவற்கு காப்பரணாக நின்று, அநீதியில் அமைந்த யாழ்ப்பாண சமூக உறவுகளை நியாயப்படுத்திவரும் தேசவழமைச் சட்டம் செயல்பட்டு வருகிறது. இந்த தேசவழமைச் சட்டத்தை மாற்றியமைப்பது எப்படி? இச்சட்டத் தொகுப்பிலுள்ள தேவையற்ற, நடைமுறைக்கு ஒவ்வாத, சமூக நீதிக்கு மாறான அம்சங்கள் என்ன? இவற்றைக் களைந்து எத்தகைய புதிய சட்ட விதிகளை ஆக்கம் செய்வது? சீதன தடைச்சட்டம் எப்படியாக அமைய வேண்டும்? அதை நடைமுறைப்படுத்துவது சாத்தியமா? தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எத்தகைய சிக்கல்கள் ஏற்படும்? இந்தச் சட்டவாக்கப் பிரச்சினைகள்பற்றி எவருமே விபரமாக, ஆழமாக எழுதவில்லை. தேசவழமைச்சட்டத்தில் புலமை பெற்றவர் எனக் கருதப்படும் சட்டத்தரணி ஒருவர் எழுதியிருக்கிறார். சொர்க்கத்தில் நீதி பரிபாலனம் நடக்கிறது; அங்குதான் தலையெழுத்தும் எழுதப்படுகிறது; திருமணங்களும் அங்குதான் நிச்சயிக்கப்படுகின்றன என்றவாறு இவர் எழுதுகிறார். சீதனத் தொகையும் சொர்க்கத்தில்தான் நிச்சயிக்கப்படுகிறது என இவர் எண்ணுகிறார் போலும். சட்டத்தரணிகளேஇப்படி மூடநம்பிக்கைகளில்புதைந்து போய்க்கிடந்தால் சாதாரண மக்கள்மத்தியில் மனப்புரட்சியை ஏற்படுத்துவது எப்படி? சீனப் பாணியில் தமிழீழத்திலும் ஒரு கலாசாரப் புரட்சி ஏற்பட வேண்டும் என ஒரு நண்பர் எழுதியிருக்கிறார். வரவேற்கப்பட வேண்டிய யோசனை. காலத்தின் தேவையும் அதுதான். ஆனால் இந்த இமாலய சாதனையை எப்படிச் சாதிப்பது? யாழ்ப்பாண இராச்சியம் இன்னும் புராணயுகத்தில் உறங்கிக் கிடக்கிறது. இருண்டகாலத்து இதிகாசங்களின் தாலாட்டுப் பாடல்களில் நிம்மதியாக தூங்குகிறது. யாழ்ப்பாணத்து மனிதனை தட்டி எழுப்புவது யார்? படித்தவர்களும் புத்திஜீவிகளும் கும்பகர்ணன்களாக தூங்கும்போது யாழ்ப்பாண சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்துவது எங்கனம்?

சீதனப் பிரச்சினை பற்றி அறிவுசார் உலகத்திலிருந்து எவரும் எழுதியதாகத் தெரியவில்லை. ஒரு பிராரம்ப உசாவலாகத் தன்னும் இந்தப் பிரச்சினையை தொட்டுப் பார்க்க எவரும் துணியவில்லை. இது சாதாரண மனிதர்களின் சாதாரண பிரச்சினை எனக்கருதி Academic உலகம் அக்கறை காட்டவில்லைப் போலும். சாதாரண மனிதனின் சமூகப் பிரச்சினைகளை சாதாரண மனிதன் புரிந்துகொள்ளும் வகையில் சாதாரண மொழியில் எழுதி விளக்குவது சமூக ஆய்வின் தரத்தைக் குறைத்துவிடும் என இவர்கள் சிந்திக்கிறார்களோ தெரியவில்லை.

இன்றைய சமூகவியல் இரண்டு திசைகளில் செல்கிறது. இதன் அடிப்படையில்தான் சமூக ஆய்வியல் முறைமையும் அமைகிறது. ஒன்று, சமூக முரண்பாடுகளையும் அதன் காரணிகளையும் ஊடுருவிப் பார்க்கும் ஆய்வு முறைமை. இதனை Conflictual Model என்பார்கள். மற்றது, சமூகத்தை ஒரு உடற்கூற்று கட்டமைப்பாக, பல்வேறு உறுப்புகள் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளதாக இயங்கும் கூட்டமைப்பாகக் கொள்ளும் அணுகுமுறை. இதனை Consensus Model என்பார்கள். இந்த இரண்டாவது அணுகுமுறையில் சமூக நிறுவனங்களும் அவற்றின் ஒத்திசைவான செயற்பாடும் சமூக இயக்கத்திற்கு அவசியமானதாக கருதப்படுகிறது. அமெரிக்க சமூகவியல் துறை இந்தக் கோட்பாட்டிற்கு முதன்மை கொடுக்கிறது. இது சமூக முரண்பாட்டுத் தத்துவத்தை நிராகரித்து விடுகிறது. புரட்சிகரமான சமூக மாற்றத்தை எதிர்த்து நிற்கிறது. எல்லா சமூக அலகுகளும் ஒத்திசைவான சமூக இயக்கத்திற்கு ஆதாரமானவை என்ற பார்வையில் சமூக நிறுவனங்களின் சீரமைப்பை மறுக்கிறது. சமூக மாற்றத்தை எதிர்க்கும் பழமைவாதிகள் இந்த சமூக தத்துவத்தை பற்றிக்கொள்வதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. யாழ்ப்பாண சமூகச் சிந்தனைத் துறையிலும் இந்தத்தத்துவம் ஆழமாக வேரூன்றி நிற்கிறது. இந்த தத்துவார்த்தப் பார்வையின் அடிப்படையில், சமூக அநீதியின் வடிவங்களான சாதியம் சீதனம் போன்றன சமூக வாழ்வியக்கத்திற்கும் அதன் ஸ்திரமான நிலையாக்கத்திற்கும் உறுதுணையானவை என நியாயப் படுத்தப்படுகின்றன. உதாரணமாக கலாநிதி சிற்றம்பலத்தின் 'யாழ்ப்பாண இராச்சியம்' என்ற நூலில், மிகவும் நுட்பமான முறையில் சாதியம் நியாயப்படுத்தப்படுவதை கீழ்க்கண்ட பந்தியில் காணலாம்.

''இத் தேசவழமைச் சட்டங்கள் வேளாள சமூகத்தினரதும் அவர்களது அடிமைகள், குடிமைகள் ஆகியோரதும் வழக்கங்களை எடுத்துக் காட்டுவதால் சாதியமைப்பு என்ற வட்டத்திற்குள்ளேதான் இவை செயற்பட்டன எனலாம். இத்தகைய அமைப்பு அக்கால மத்திய கால பொருளாதாரப் பின்னணியிற் சமூகத்தின் பல்வேறு பிரிவினர் பிணக்குகள் இன்றி இயங்குவதற்கும் சமூகத்தில் ஸ்திரமன நிலை காணப்படுவதற்கும் உறுதி செய்வதாக அமைந்திருந்தது'' (137-ம் பக்கம்)

இங்கு சமூக ஒத்திசைவுத் தத்துவம் சாதிய முரண்பாட்டை மூடி மறைத்து விடுவது மட்டுமல்லாது, நிலையான சமூக இயக்கத்திற்கு சாதியம் ஆதாரமாக அமைவதாகவும் நியாயப்படுத்த முனைகிறது.

யாழ்ப்பாண அறிவுலகம் சீதனம் பற்றியோ, சாதியம் பற்றியோ உண்மையை எழுத ஏன் துணிவதில்லை என்பதை புத்திக்கூர்மை உள்ளவர்கள் புரிந்து கொள்வார்கள்.

''அறிவுபுகட்டுபவர்களுக்குமுதலில் அறிவு புகட்டப்பட வேண்டும்'' என்று ஒரு சமூக சிந்தனையாளன் கூறியது இங்கு நினைவுக்கு வருகிறது.

-பிரம்மஞானி-

## எறும்பு வீடு

எறும்புகளிலேயே ஆயிரம் வகைகள் உள்ளன. பாலைவனத்தில் எறும்புகள் உள்ளன. கடற்கரையில், மலைச்சாரலில், காட்டில்... எவரெஸ்ட் சிகரத்தைத் தவிர பெரும்பாலும் உலகின் மற்ற இடங்களில் எல்லாம் எறும்புகள் உள்ளன. ஆயிரம் வகையிருந்தாலும் தேனீ, குளவி வகைகளுக்குக் கொஞ்சம் சொந்தம் உண்டு.

அதி உயர புற்றுகள் அமைப்பதில் (சுமார் உயரம் 20 அடி!) கில்லாடி டெர்மைட்ஸ் என்றவகை எறும்புகள்தான். ஆபிரிக்க, வட அமெரிக்கக் காடுகளுக்குப்போனால் டெர்மைட்ஸ் பிரஜைகளைச் சந்திக்கலாம்.

# பேச்சு வார்த்தைப் பொறியில் சிக்கிய

# பாலத்தீன விடுதலை இயக்கம்

**பாலகுமாரன்**

கடந்த ஏப்பிரல் மாதத்தில் யெருசலேம் பகுதி பாடசாலையொன்றுள்புகுந்தபாலத்தீனியன் ஒருவன் அங்கிருந்த மாணவர், ஆசிரியரொருவரை கத்தியால் தாக்கிக் கொல்ல முயன்றான். ஓர் அராபியன் இவ்வாறு தனது எதிர்ப்பைக் காட்டுவதை எவ்வகையிலும் சகிக்க முடியாது எனக்கூறிய இசுரேலியப் பிரதமர் யிட்சாக் றபின், உடனடியாகத்தான் எல்லா யூத மாணவர்க்கும் தாக்குதலுக்கு பயன்படும் மின் கொட்டன்களும் இரும்புமுனை முட்டியும் (Electric Clubs Knuckle dusters) வழங்கப்படும் என்றார் பின்னர் பாலத்தீனியருக்கு பாடம்படிப்பிப்பதற்காக தம்மால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட (காசா, மேற்குக் கரை) பகுதிகளை மூடி அதனை துண்டித்தார் இதனை 1967-ம் ஆண்டின் முன் இப்பகுதிகள் இருந்த நிலையையும் இனி எதிர்காலத்தில் இப்பகுதி இருக்கப்போகும் தனித்துவமான சுதந்திர நிலையையும் குறிக்கிறது என பாலத்தீனியத் தலைவர் ஒருவர் கோபச்சிரிப்புடன் குறிப்பிட்டார். இவ்வாறு துண்டித்ததின் மூலம் ஓர் இலட்சத்திற்கும்மேற்பட்ட நாளாந்தம் இசுரேலுக்கு வேலைக்காக செலும் பாலத்தீனியர் வயிற்றில் அடித்தார். இவ் அடக்குமுறையைஅவர் பாலத்தீனியத்தில் மேற்கொள்ளும் போது அவரின் பிரதிநிதிகள் வாசின்டனில் அரபு - இசுரேலிய பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். இது தான் இசுரேலியர் பாலத்தீனியர் தொடர்பில் கைக்கொள்ளும் இப்போலதய அணுகு முறை.

கடந்த டிசம்பரில் 400 பேருக்கு மேற்பட்ட இசுலாமிய ஜிகாத், கமாஸ் இயக்கத்தினரை இசுரேல் நாடு கடத்திய போது நடக்காது எனக்கருதப்பட்ட பேச்சுவார்த்தை ஒருவாறாக மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. 1991ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் ஸ்பெயின் தலைநகரான மாட்ரிட்டில் பெரும் கோலாகலமாக அமெரிக்காவால் தொடக்கப்பட்ட இப்பேச்சுவார்த்தை 11/2 வருடத்திற்கு மேலாக ஆக்க பூர்வமான பயன்கள் இன்றி அனுமார் வால்போல முடிவில்லாமல் நீண்டு செல்கின்றது. இப்போது ஒன்பதாவது சுற்றும் முடிந்து இவ்வாரம் பத்தாவது சுற்றும் ஆரம்பமாகிவிட்டது. வளைகுடாப் போரின் உடனடி விளைவாக தோன்றிய இப்பேச்சுவார்த்தையே அமெரிக்காவின் புதிய உலக ஒழுங்கின் முதற்படியாக, நடவடிக்கையாக கருதப்பட்டது. இது எவ்வாறாயினும் பாலத்தீனியர் பிரச்சினை இதே வடிவத்தில் தொடர்வது தனக்கும் தனது அரபுலக நண்பர்கட்கும் பெரும் ஆபத்தானது என்பதையும் சதாம் குசைன் இசுரவேலைநோக்கிஏவிய "ஸ்கட்" ஏவுகணை ஒவ்வொன்றின் பின்னும் பாலத்தீனியர் பிரச்சினையின் தாக்கம் இருந்தது என்பதையும் உணர்ந்த அமெரிக்கா பிரச்சினையின் உக்கிரத்தை தணிவிக்க, திசைதிருப்ப பெரிய எடுப்பில் இப்பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது.

இவ்வாறாக அமெரிக்கநலன்கள் ஒருபுறமிருக்க பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோர் நிலையோ வெவ்வேறு விதமாக விசித்திரமாக உள்ளது. எனினும் தம்மால்தான் பேச்சுவார்தவை முறிந்தது என்கிற பழியை தவிர்ப்பதில் மட்டுமே இவர்கள் ஒருநோக்குடையவர்களாக தென்படுகின்றனர். பெரும் இக்கட்டில் சிக்குப்பட்டவர்கள்போலதவிக்கும் இவர்கள் தத்தம் நிலைகளிலிருந்து சிறிதும் விலகோம் எனக்கூறிக் கொண்டு திரைமறைவில் பேரம்பேசி விட்டுக்கொடுப்புகள் செய்து வெளி உலகை குழப்பத்திலாழ்த்துகின்றனர். இதற்கு தக்க உதாரணம் நாடு கடத்தப்பட்ட 400 பேரின் விவகாரத்தில் எலலாத் தரப்பினருமே சொல் ஒன்றுசெயல் ஒன்றாக செயற்பட்ட விதம் குறிப்பாக மிகப் பலவீனமான நிலையிலிருந்து கொண்டு உலக அபிப்பிராயம் என்கின்ற கவசத்தோடு பேச்சில் ஈடுபட்டிருக்கும் பாலத்தீனிய இயக்கமும் அதன் தலைவர் அரபாத்தும் படும்பாடு சொல்லத்தரமன்று. தமது மக்களின் பிரதிநிதி தாமே எனத் தன்மானத்தோடு பேச்சுவார்த்தையில் ஈடுபட முடியாமல் பரம எதிரியாக கணித்த அமெரிக்காவை இப்போது முழுமையாக நம்ப வேண்டிய நிலையில் வளரும் மாற்றுத்தலைமை கொடுக்கும் அழுத்தங்களால் துவண்டு போயிருக்கும்பாலத்தீனிய விடுதலை இயக்கத்திற்கு இப்பேச்சுவார்த்தையே உயிர் மூச்சாக இறுதி வாய்ப்பாக உள்ளது. எனவே பாலத்தீனியர் தன்னாட்சி தொடர்பில் சாதகமான முடிவுகள் காணப்படாவிட்டால் இவ்வியக்க நிலைமை மிக மோசமகி விடும் என கருதப்படுகின்றது.

அதேசமயம் பலமான நிலையிலிருந்து பேச்சில் கலந்து கொள்ளும் இசுரேலுக்கும் இன்று பல நிர்ப்பந்தங்கள். இப்போது இசுரவேல் முன்னர் போல் செழிப்பாக இல்லை. அதிகரிக்கும் பாதுகாப்பு செலவால் நலிவடையும் பொருளாதாரம்முன்னதையதைப்போல் கவர்ச்சி மிக்க தாயகமாக வெளியுலக யூதர்க்கு இசுரேல் இல்லை. அண்மையில் ருசியாவிலிருந்து வந்து குடியேறிய யூதர் ஏன் இங்கு வந்தோம் என்கிற மனநிலையில் இருப்பதாக கூறப்படுகின்றது எனவே அமெரிக்கா தரும் நிதி, இராணுவ உதவி, அதன் கடன் உத்தரவாதத்தை நம்பியே இசுரவேல் காலம் கழிக்கின்றது. பேச்சுவார்த்தைக்கு சம்மதித்தால் மட்டுமே உதவி தொடரும் என அமெரிக்கா கூறிவிட்டது. அதுமட்டுமன்றி இப்போது பலவீன நிலையிலிருக்கும் பாலத்தீனிய விடுதலை இயக்கத்தோடு பேசாவிட்டால் பின்னர் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் வளர்ந்து வரும் மக்கள் எழுச்சியின் புதிய தலைமையை சந்திக்க நேரிடும் என்கிற அச்சமும் இசுரவேலைப் பிடித்தாட்டுவதாலே இசுரவேல் பிடிவாதங்களைத் தளர்த்த வேண்டியுள்ளது.

ஒன்பதாவது சுற்று ஆரம்பிக்கப்பட ஆடப்பட்ட நாடகமே இவ்வுண்மைகளை விளக்கி நிக்கின்றது. பின்வருமாறு நாடகம் ஆடியே எல்லாத்தரப்பினரும் தத்தம் நிலைகளிலிருந்து பின்வாங்கி பேச்சுவார்த்தைக்கு சென்றனர் இசுரவேலோ பேச்சுவார்த்தைக்கு பாலத்தீனியர் வராவிட்டால் தாம் சிரியாவோடு கோலான் குன்றுப்பகுதி தொடர்பாக தனியான இணக்கம் காணப்போவதாக அச்சுறுத்த—சிரியாவோ மறுக்காமல் மௌனமாக இருக்க—பாலத்தீனிய விடுதலை இயக்கமோ மக்கள் பேச்சுவார்த்தைக்கு காட்டும் எதிர்ப்பினை வெளி உலகம் அறிய அனுமதிக்க — இதற்கிடையில் அமெரிக்கா திரைமறைவில் அழுத்தங்கள் போட்டு சில வாக்குறுதிகளை பாலத்தீனியர்க்கு இசுரேலிடமிருந்துபெற்றுக்கொடுக்க—மீண்டும் பேச்சுவார்த்தை ஆரம்பமாகியது. எனவே நாடுகடத்தப்பட்ட 400 பேர் விவகாரம் இப்போதைக்கு மறக்கப்பட்டு விட்டது. இதனாலே இசுரவேல் யெருசலேம் பகுதியில் இருந்து பாலத்தீனியர் இனிமேல் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்ளலாமென்றும் (இதனால்தான் இவளவு காலமும் பேச்சுவார்த்தைக் குழுவிற்கு தலைமை தாங்கியும் நேரடியாகப் பேச்சில் ஈடுபடாத பைசல் குசேனி இப்போது பேச்சுக்களில் ஈடுபடுகிறார்). 1967ஆம் ஆண்டிலிருந்து நாடு கடத்தியோரில் ஒரு சிலரை மீண்டும் தாயகம் திரும்ப அனுமதிப்பதாகவும் (இதன்படி அண்மையில் 30 பாலத்தீனியர் பல்லாண்டுகளுக்குப்பின் தாயகம் திரும்பினர்.) கடந்த டிசம்பரில் நாடு கடத்தியோரை விரைவில் ஏற்பதாகவும் இனிமேல் நாடுகடத்தல் செய்வதில்லையென்றும் இசுரேல் ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிய வருகின்றது. அமைதிக்கு மாற்றாக நிலம் என்கிற முடிவின்படி ஐ நா.வின் பாலத்தீனியர் தொடர்பான மிகப் பழைய 242,338ஆம் இலக்கத் தீர்மானங்களை ஏற்பதாகவும் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் நெருக்கடிகளை தளர்த்துவதாகவும் ஒப்புக்கொண்டுள்ளது. இவற்றினை விடவும் அமெரிக்காவும் வழங்கிய மேலதிக உத்தரவாதத்தை நம்பியே பாலத்தீனியர் மீண்டும் பேச்சுவார்த்தைக்கு சென்றதாக தெரிகின்றது.

இசுரேலியர் இவ்வுடன்பாடு பற்றி எதுவுமே கூறாதபோதும் யாசீர் அரபாத் தனது சொந்த நிலையை காப்பாற்றும் பொருட்டு இத்தகவல்களை அம்பலப்படுத்துகின்றார். 100க்கும் மேற்பட்ட நாடுகளில் தூதுவர் அலுவலகங்களை அமைத்து ஐ நாவின் பார்வையாளர் தகுதியைப் பெற்று உலக அபிப்பிராயத்தை தனக்கு சாதகமாக மாற்றிய பாலத்தீனிய விடுதலை இயக்கம் இன்று அத்தகைய ஆதரவு என்னும் பொறிக்குள் சிக்கி இழுபட நேரிட்டுள்ளது. அதே சமயம் இசுரேலோ பலம் மிக்க எதிரியான சிரியாவோடு தனியான உடன்படிக்கை செய்து சிரியத் தலைவர் ஆசாத்தை இன்னொரு எகிப்திய சதாத்போல் மாற்றவே முழுமையாக விரும்புகின்ற போதும், வேறு வழி இன்றி வரையறுக்கப்பட்ட பாலத்தீனிய சுயாட்சி வழங்க தயார் என்று கூறி வருகிறது.

எப்படிப் பார்த்தாலும் நிலைமை சாணேற முழம் சறுக்கும் நிலையாகவே இருக்கின்றது. இசுரேலின் விட்டுக் கொடுப்புகள் அதன் உண்மை முகத்தை மாற்றவே இல்லை என்பதே யதார்த்த உண்மை. அதைவிட இசுரவேலின் தொழிற்கட்சி ஆட்சி இப்போது அலைபாயத் தொடங்கி விட்டது. 120 உறுப்பினர்களை கொண்ட இசுரேலிய நாடாளுமன்றம் 46 உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்கட்சி தீவிர இடது சாரி போக்குடையMeretz கட்சியின் 12 உறுப்பினர்களையும் அதே சமயம் தீவிரபிற்போக்கு Shas கட்சியின் ஆறு உறுப்பினர்களையும்நம்பியே ஆட்சி நடத்துகின்றது. பாலத்தீனியர் தொடர்பான பிரச்சினையில் எதிரும் புதிருமான கருத்துக்களைக் கொண்ட கூட்டாட்சி எவ்வாறு தீர்வு காணப்போகிறது என்பது கேள்விக்குறியே. இவை ஒருபுறமிருக்க 1967 ஆம் ஆண்டின் பின் மொத்த சனத் தொகையில் 15 லட்சம் அகதிகளாகவும் 12 இலட்சம் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில் அடக்கப்பட்டவர்களாகவும் வாழும் பாலத்தீனிய மக்களோ இவை பற்றி பெரிதும் அலட்டிக் கொள்ளாமல் வெளிச்சக்திகள் எதனையும் தங்கியிருக்காமலேயே தமது வீரம் செறிந்த எழுச்சி மிக்க போராட்டத்தினை முன்னெடுத்துச் செல்கின்றனர். காசாப்பகுதியில் சேரிப்புற மக்களைப் போல் இழிநிலையில் வாழ்ந்தாலும் ஒற்றுமைப்பட்டு ஒவ்வொரு பாலத்தீனிய குடும்பமும் நடாத்தும் புதிய போரைத் தடுக்க இசுரேலினால் முடியவே இல்லை. அவர்களது புதிய தனித்துவம், புதிய தலைமை, புதிய வரலாற்றின் ஆரம்பத்தினைகுறிப்பதாகவே ஆய்வாளர்கள் கருதுகின்றனர். முன்னைய பாலத்தீனத் தலைமைகள் தாம் தங்கியிருந்த அரபு நாடுகளின் நலன்களுக்கேற்ப வளைந்து கொடுத்ததன் விபரீத விளைவுகளை மக்கள் நன்கு அறிந்துள்ளனர் எனவே இம்மக்களை கண்டு அஞ்சியே எல்லாத் தரப்பினரும் பேச்சுவார்த்தை திரைக்குள் தம்மை மறைத்துக் கொள்ள முற்படுவது மிகத்தெளிவான விடயமாகிறது. சென்ற வாரம்கூட இப்பேச்சுவார்த்தை என்பது பாலத்தீனியர் தமது நலன்களை அமெரிக்கா இசுரவேலிடம் சரண் அடையச் செய்வதே பொருள் எனக் கூறி பாலத்தீனிய நிழல் நாடாளுமன்றின் சபாநாயகர் தமது பதவியைத் துறந்தார். இது பேச்சுவார்த்தைக்கு பலத்த அடியாக கருதப்படுகின்றது.

பாலத்தீனிய விவகாரங்களை நுணுக்கமாக ஆய்வோர் இப்போராட்டம் தரும் இரண்டு மிக முக்கிய படிப்பினைகளை இவ்வுலகம் படிக்காது விட்டால் அல்லது ஏற்காது விட்டால் பாலத்தீனிய பிரச்சினை மட்டுமல்ல, உலகின் எந்த தேசிய இனத்தின் சிக்கலையும் தீர்க்கமுடியாது என மிகத் தெளிவாக குறிப்பிடுகின்றனர். முதலாவது, மக்களின் தன்னாட்சி உரிமைகளையும் அரசுகளின் பிரதேச ஒருமைப்பாட்டையும் ஒன்றாக ஒரே காலத்தில் பாதுகாக்க முடியாது என்பதாகும். பிரதேச ஒருமைப்பாடு என்கிற பார்வை சமீப காலமாக அதிகரித்த அளவில் பயன்படுத்தப்படுவதை கண்டிக்கும் அவர்கள், அவ்வாறாயின் இசுரேல் அல்லது பாலத்தீனம் என்கிற ஒரு நாடே இருக்க முடியும் - இரு நாடுகள் அல்ல என்கின்றனர். அதுபோலவே தன்னாட்சிக்கு போராடும் தேசியங்களின் போராட்டத்தை முன்னெடுக்கும் சக்திகளை பயங்கரவாதிகள் அல்லது அப்போராட்டத்தை பயங்கரவாதம் என முத்திரை குத்தி அதை சட்டவலுவாக்கம் பெறச் செய்வதை இன்னும் விபரீதமான பாரிய தவறு என்கின்றனர். அவ்வாறாயின் என்றுமே பாலத்தினிய மக்களை பிரதிநிதித்துவப்படுத்த எவருமே இல்லாது போய்விடக்கூடும் என்றும் அவர்கள் கருதுகின்றனர். இது பாலத்தீனியத்திற்கு மட்டுமல்ல தமிழீழத்திற்கும் பொருந்தும் என்பதே எம் கருத்து ஏனென்றால் ஐ.நாவின் அரசியல் சாசனம் தன்னாட்சி என்பது மக்களுக்கே அன்றி அரசுகளுக்கல்ல என்பதை மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளது.


## தேவை

## களஞ்சியப் பொறுப்பாளர்

யாழ். நகரில் இயங்கிக் கொண்டிருக்கும் வர்த்தக நிறுவன மொன்றிற்கு தகுதிவாய்ந்த களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. வயதெல்லை 40 முதல் 50 வரை. தகுந்த அனுபவ ஆவணங்களுடன் 23-06-93 ற்கு முன் விண்ணப்பிக்கவும். நேரிலும் விண்ணப்பங்கள் ஏற்கப் படும்.

முகவரி:-

விளம்பர இலக்கம் 190,
மே / பா ஈழநாதம்
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(5161)

## உடன் தேவை

விரையுங்கள்:

நல்ல விலைக்கு வாங்கப்படும்

உங்களின் பழைய மெத்தைகள், குசன் துண்டுகள் குசன் வகை சகல அளவுகளிலும்) உடன் பணத்திற்குக் கொள்முதல் செய்யப்படும். தேரிலும் வந்து வாங்கப் படும்.

இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
இல. 166, 1-ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
(வேமபடி மகளிர் பாடசாலைமுன்பாக) (5170)

சிறுகதை

# வெள்ளைச் சப்பாத்து

## கோளாவிலூர் கிங்ஸ்லி

ஒழுங்கையில் ஒரு கும்பல் ஏதோவெல்லாம் தங்கள் பாடசாலை நிகழ்வுகள் பற்றி கதைத்துக் கொண்டு நகர்ந்து விட்டனர். தூரத்துப் பார்வைக்கு அவர்கள் அப்படியே வெள்ளையாகவே தெரிகின்றனர். சில நிமிட இடைவெளிக்குப் பின்னர் இன்னுமொரு பகுதியினர்; அவர்களும் ஆரவாரித்துக் கொண்டு...

எல்லாம் நேற்றுடன் நடந்து முடிந்த வகுப்பேற்றப் பரீட்சையைப்பற்றித்தான் ஆராய்ந்து அலசிக்கொண்டு செல்கின்றனர். இன்னும் சிலர்... உயர் வகுப்பு மாணவர்கள்.

வெள்ளைக் கொக்கா ஒழுங்கையால் அணிவகுப்பதைக் கண்ட மேகலாக்கா- நீண்ட நேரமாக குளித்துத்தள்ளிய கோமதியைச் சினத்தாள். ''கோமதி...என்ன இன்டைக்கு முழுக்க குளிக்கப் போறியோ''.. வழமையான வன்மம் வார்த்தையில். அடுத்த நிமிடமே கோமதி கிணற்றடியை விட்டு வெளியேறிவிட்டாள். அக்கா என்றால் நரி நிறம் அவளுக்கு. அப்பா இல்லை அண்ணா இல்லை; அம்மாவும் இவைகளில் கூர்ந்த கவனமில்லை ஆகஒரு இளகியசூழல் இதனாலோ என்னவோ மேகலாக்கா இறுக்கமாகவே இருந்தாள். ஒன்று... தங்கையைத் தவிர எல்லாருடனும் அன்பாகப் பழகுவான்.

அவசியம் ஏற்பட்டதுமாதிரி ஒவ்வொருவராக திளாவிப் பார்த்தாள்மேகலாக்காஅனைவரும் வெள்ளைச் சப்பாத்துடன்தான்... அப்படியே வீதியைப் பார்த்தபடி நின்றவள் ஒருமுறை சத்தமிட்டுச் சிரித்துக் கொண்டாள். அங்கே பார்த்தால் ஒராம் ஆண்டு படிக்கிற சுந்தரம் மாமாவின்மூத்தமகன் ரகுபதி, அனைவரையும் முந்திக்கொண்டு ஓடுகிற பிரமையோடு சபபாத்துக்கால் தடுக்குப்பட்டு புத்தகம் எங்கோ பறக்க விழுந்து சுழன்றடித்தான்.

ரசித்துக்கொண்டு நின்றவளை ''அக்கா''...என்ற குரல் திரும்பவைத்தது. கிணற்றடியைவிட்டு வெளியேறி10நிமிடம் இருக்காது. வெளிக்கிட்டு வந்து நின்றாள் கோமதி. ''போயிற்று வாறனக்கா''... என்றள் தாழ்ந்த குரலில். ''இவ்வளவு கெதியா''... (...) ''கோமதிசாப்பிட்டியா''என்றாள்அக்கா. ஒ...ம். முகத்தைச் சுழித்துக் கொண்டுகூறினாள். முகம் வாடியிருந்தது.

அக்காவிடம் வெள்ளைச் சப்பாத்து கேட்டுக்கேட்டு ரேகித்து போனதால், பள்ளிக்குப் போகும் போது மட்டும் கொஞ்சம் சோகமாக இருப்பாள். அதைத்தான் இப்பொழுதும் வெளிக்காட்டினாள். அந்த அனுதாபத்திலாவது வேண்டித்தரும் என்றோ என்னவோ... கோமதி வெறும் செருப்புமில்லாமல் நடந்து சென்றாள். நேரம் போய்விட்டதால் இடையிடையேஓடினாள்.

அக்கா அதிக நேரம் அதில் சுணங்கவில்லை. அடிப்போட்ட பாய் இரண்டு இன்னமும் பின்

அதனை இன்றைக்கு கட்டாயம் பின்னிமுடிக்க எண்ணியவள் திரும்பி விட்டாள். இதை நினைக்கத்தான் அம்மாவின் ஞாபகம் வந்தது. நேற்று வரவேண்டிய அம்மா இன்றைக்கு பின்நேரமாவது வந்து தட்டவேண்டும். அதிரடிப் படைவேறு அங்கால போனதாக கேள்வி. இந்தச் சேதியை கேட்டதில் இருந்து, ஞாபகம் வருகின்ற நேரமெல்லாம் துன்புறுத்திக் கொண்டிருந்தது. என்றாலும் வழமையாக பன்னறுக்கவென்று அம்மா வயல் பக்கம் போனா கட்டுச்சோத்தோடு இன்னும் ஒரு நாள் கூட நின்றுஅறுத்துக்கொண்டு வராட்டி அவவுக்கு பத்தியமில்லை. இந்த நம்பிக்கைதான் நெஞ்சிற்குள் நேரவிழுந்தது.

வீட்டுக்குள்நுழையப் போன அக்கா தலையைச் சற்று குனிந்தாள். அப்பொழுது குடில் பக்கம் சடுதியாக பார்த்தவள் மலைத்துப் போனாள் (...... கோமதியின் சாப்பாடு அப்படியே இருந்தது. அக்காதான் அவளுடையநடுவிலசிவப்புபூப் போட்ட பஞ்சள் கோப்பையில் தண்ணியோடு சேர்த்து கொஞ்சம் பழஞ்சோறும் தேங்காய்ப்பூவும் இட்டு திருவுலைக் குற்றிக்குமேல் மூடிவைத்திருந்தாள். திறந்து பார்த்தாள் அக்கா. எறும்பு குடியேறியிருந்தது அவளை நினைக்க ஆததிரமாக வந்தது.

ஏழையக்காவை புரியதா வயசு; வெள்ளைச் சப்பாத்து வாங்கித்தராததிற்கு இடையிடையே இப்படி பகிஷ்கரிப்பு... தொண்டைக்குள் அடைத்தது. உமிழ் நீரை விழுங்கினாள். அதுவும் பொறுததது கண்களில் நீர்ப்படலம் தங்கையின் சின்னச் சாப்பாட்டுத் தட்டை மறைத்துக் கொண்டது... புறங்கையால் கண்ணைத் துடைத்துவிட்டு விறைத்துப் போய் மேலே பார்த்தபடியிருந்தாள்...பார்வை செத்திருந்தது.

போன வருடம் பெருநாவலர் படிக்கேக்க வெள்ளச் சப்பாத்து கேட்டதிற்கு இந்த முறை அஞ்சாம் ஆண்டு பாஸ் பண்ணினியெண்டால் எப்படியும் வேண்டித் தருவன் என்று சொல்லி கடைசியில் ஏமாத்தியிருந்தாள் அக்கா. பெருநாவலர் வித்தியாலயத்தில் ஆண்டு அஞ்சு மட்டும்தான். அது ஊர்ப்பள்ளி. அதில் வெள்ளைச்சப்பாத்து போட்டாலும் சரி, வெறும் செருப்புமில்லாமல் போனாலும்சரி. கோமதிக்கு வெள்ளைச்சப்பாத்தின் மேல் கொள்ளைஆசைதான். அதால அப்ப இருந்தே அக்காவிடம் கேட்டுப் பிடித்திருந்தாள். ''மற்ற பிள்ளைகள் முழுவதுமென்ன சப்பாத்தேடுதானா போகுதுகள்'' என்று ஒரு பெயர்ப்பட்டியலையும் உதாரணம் காட்டி பள்ளியிலும் டீச்சர் இதைப்பற்றி கேட்பதே இல்லையாம் என்றும் தங்கையின் ஆசையை புரியாதமாதிரி மழுப்பி விடுவாள் அக்கா. தன்னிடம்காசில்லாத காரணத்தைபெரிதாக கொள்வதில்லை.

கோமதி இந்த வருடம் ஆறாம்ஆண்டுபடிக்கRKMக்கு

னையும் எழுதிவிட்டாள்RKM தான் இந்தப்பகுதியில பெரிய பள்ளி. இப்போ கொலிச்சாக மாத்தியிருக்கு. கடும் கட்டுப்பாடு. எல்லாரும்வெள்ளைச்சப்பாத்து கட்டாயம் போடவேணும். அங்கே அப்படித்தான் காணமுடிந்தது கோமதி வெறும் காலோடு போய் வந்தாள். வகுப்பேற்றுப் பரீட்சைவரை. அதற்கும் அவளுக்கு விருப்பமில்லை. ஆயினும் அக்காதான் விடவில்லை.

அவளுக்கு வெள்ளைச்சப்பாத்து அணிந்து தனது நண்பி மஞ்சுவைப்போல்பள்ளி செல்ல எவ்வளவு ஆசை. ஆனால் இப்போதெல்லாம் வெள்ளைச் சப்பாத்தை அவள் வெறுப்பாகவே பார்த்தாள். தனது நண்பி கூட தன்னை பள்ளிக்கு அழைத்துச் செல்ல வருவதில்லை என்பதற்காக மட்டுமில்லை; பலமுறை வகுப்புக்த வெளியில் நிறுத்தப்பட்டும் அடிவேண்டியும் அந்த பிஞ்சு நெஞ்சில் கீறாக வடிந்திருந்தது. சிறையில் வாழும் அல்லது வாடும் தன் அண்ணாவுக்கு நிலைமையை மடல் மூலம் சொன்னாலும் அண்ணாவும் எப்படியாவது படிக்குமாறு தான் பதில் போடுவான்.

வெள்ளைச் சப்பாத்துக்காகத்தான் முன்பு அவள் பள்ளிக்கே போனாள். இப்பொழுது பள்ளிக்கு போவதற்காக மட்டும் அக்காவிடம் அதைக் கேட்டாள். அதற்காக பள்ளியையும் விடுவாள். ஆனால் அக்கா .. தன்னைப் போல வரக்கூடாதாம்.

அக்காவை முன்பு பலமுறை கூள்பிடித்தாள் கோமதி. பன்வாட்டிக் கொடுத்தாள். சாயம் போட்டுக் கொடுத்தாள். பன் காயப் போடுவதில் அக்காவுக்கு உதவினாள். அக்கா பேன் பார்த்துவிட கூப்பிட்டால் மறுக்காமல் போனாள். அம்மாவுடன் பன்புல் அறுக்க உதவியாகப் போவதாகவும் கேட்டாள். தன் ஆசை நிறைவேற இன்னும் ஏதேதெல்லாம் அம்மாவுக்கும் அக்காவுக்கும் செய்தாளவள்.

அம்மாவும்,அக்காவும் குருவி மாதிரி கூட்டம் பண்ணிய காசை அப்படியே அண்ணாவை பார்க்கப் போகத்தான் அளவாக இருந்தது. அண்ணா பலமுறை தன்னைப் பார்க்க வரத்தேவையில்லை; தங்கையின் படிப்பைகவனியுங்கள் என்று எழுதியும் கூட அக்கா சேர்த்த காசை அம்மாவிடம் கொடுத்து அனுப்பி வைத்தாள்.

எதற்கும் அம்மாவிடமும் ஒருக்கால் கோமதி வெள்ளைச் சப்பாத்து கேட்டிருந்தாள். அம்மா அண்ணாவின் வெள்ளைச்சப்பாத்தை விசாரித்தாள். அக்கா அதை பக்குவமாக வைத்திருக்கிறாள். அடிக்கடி அண்ணாவின் ஞாபகத்துக்கு எடுத்துப் பார்ப்பாள். கே மதிக்கும் அதைக்கண்டால் அண்ணாவின் கடைசிக் காட்சிதான் ஞாபகம் வரும். பள்ளி கலைந்து வரும் வழியில் அதிரடிப்படை பிடித்த போது அணிந்திருந்த வெள்ளைச்சப்பாத்து. வெள்ளைச் சேட் வெள்ளை ரவ்சர்அக்கா இப்பொழுதும் கேம்பில அவன் கொடுத்தமாதிரியேகழுவாமல் வைத்திருக்கிறாள். அண்ணா விடுதலையாகி வந்த பிறகு தானாம் கழுவுறதாம் என்று. அதற்கு நேத்தியும் வைத்து விரதமும் பிடித்து வருகிறாள்.

அண்ணா அனுப்பி ஒரு கிழ

இடது கையால் வைத்து விட்டதால் மறந்ததாகக் கூறி நேற்று பின்னேரம் தான் பிரித்து வாசித்துக் காட்டச் சொன்னாள் அக்கா. அதில்!

'அன்பின் அம்மா, அக்கா மற்றும் தங்கை யாவரும் அறிவது; நான் நலம். அதுபோல் தாங்களும் இருக்க இறையருள் வேண்டுகிறேன். தாங்கள் அனுப்பிய மடல் கிடைத்தது; மகிழ்ச்சி. மற்றும் தங்கை பரீட்சை பற்றி எழுதியிருந்தாள். கட்டாயம் அவள் பாஸ் பண்ணுவாள் என்ன வழிப்பட்டும் தங்கையின் படிப்பை கவனியுங்கள். வெள்ளைச்சப்பாத்துகேட்டு பல மடலில் கெஞ்சியிருந்தாள். என்னால் என்ன செய்ய முடியும்? எனது படிப்பும் மூன்று வருடமா அலைக்கழிந்து விட்டது. என்னை எவ்வளவு கஷ்டப்பட்டு படிப்பித்தீர்கள். பதிலாக தங்கையின் படிப்பிற்கு முடிந்தவரை உதவுங்கள். அதுவே நீங்கள் எனக்குச் செய்யும் கடமை. பரீட்சைமுடிவினை பதிலில் அறிக்கவும், மடலை வாசித்தவுடன் அக்கா கண்கலங்கிவிட்டாள். கோமதிக்கும் அழுகைதான் வந்தது. அந்தவேளை அம்மா இருந்தால் ஒலமிட்டிருப்பாள். அண்ணா எழுதிய அத்தனை கடிதத்தையும் அக்கா பத்திரமாய் பெட்டிக்குள் வைத்திருக்கிறாள். இதையும் கையோடு வேண்டிக் கொண்டாள். தானே ஒருநாள் அண்ணாவின் மடலை அறியாமல் கிழித்துவிட்டு பதறியடித்து விழுந்தாள். அக்கா காகிதமாக நினைப்பதில்லை. அந்த மடல்களை.

★ ★ ★

அடிப்போட்டதில் ஒரு பாயை தலைக்கட்டிவிட்டு மற்றப் பாயில் கைவைத்துவிட்டாள் அக்கா. மதியமாகியும் அடுப்பங்கரைப் பக்கமும் போகவில்லை அவள். காலையில் தங்கை சாப்பிடாததால் தானும் சாப்பிடலை. பள்ளி கலைந்து வரும் தங்கைக்கு சீனிமா கொஞ்சம் வைத்திருந்தாள் அது தம்பிக்கு அனுப்பி விட்டு மிச்சம். அதில் அவளும் அள்ளிவாயில் போட்டாள், ஒரு மாவிலையை பிய்த்தெடுத்து.

அக்கா பசபசவென பின்னுகிறாள். இரண்டு பாயையும் பின்னி இன்றைக்கு முடித்துவிட்டால் அம்மாவிடம்நாளைக்கு அல்லது நாளைன்றைக்கு திருக்கோவில் சந்தைக்கு கொடுத்து விற்று விடலாம். காசு கைக்கு வந்ததும் முதல் வேலை சுந்தரம் மாமாவைக் கொழுவிச்சு ஒரு நல்ல வெள்ளைச்சப்பாத்து வேண்டுறதுதான். கோமதியையும் கையோடு கூட்டிக் கொண்டு போகவிட்டு அவளுக்கு பிடிச்சதாகத்தான் வேண்டுறது. ஏழாம் ஆண்டுக்காவது அவள் வெள்ளைச்சப்பாத்தோடு போகவேணும். ''இப்ப மஞ்சுவும் தன்ன கூப்பிட வாறதில்லையென்டு நேற்றும் கவலைப்பட்டவள்? இதைச் செய்துவிட்டு தம்பிக்கு ஒரு கடிதமும் எழுதுவிக்கஇருந்தாள் அக்கா.

ஒழுங்கையில் பள்ளி கலைந்துபோன பிள்ளைகள் சத்தம் கேட்டு வெகுநேரம். பின்னிக் கொண்டு இருந்ததால் கேட்டதும் கேட்காததும். ''காலையிலையும் சாப்பிடலை .. பிள்ளையும் சுணங்குது?... என்று எண்ணிக்கொண்டவள் வெளியில் வந்து நிமிந்தாள். மூன்று மணியிருக்கும். நீண்டநேரம் இருந்த இரையால் இடுப்பு வலித்தது. சோம்பல் முறித்துக் கொண்டு ஒழுங்கைப் பக்கம் நடந்தாள். பக்கத்தில் குடியிருந்த பார்வதி மாமியின் பாழ்வளவுக்குள் ஒழுங்கையோரம் நின்ற தென்னைக்கு கீழ் ஒரு விளையாட்டு கும்பல் வட்டமிட்டு நடுவில் யாரையோ புதினம் பார்த்தது. அவர்களிடம் தங்கையை விசாரிக்க மெதுவாக போனாள். மேகலா அக்காவைக் கண்ட கும்பல் சற்றுவிலகியது. அங்கே அந்த ஊற்றை மணலுக்குள் வெள்ளையுடையுடன் முறிந்து கிடந்த ஈக்கில் குச்சியால் எதையோ நினைத்துக் கொண்டு கீறிக்கீறி இருந்தாள். அவளின் றிப்போட்டும் மண்ணுக்குள் கிடந்தது குனிந்தபடி இருந்தவள் கிட்ட வந்த பிறகுதான் அக்காவைக் கண்டாள். சட்டென அக்காவை கண்டவள் விம்மி விம்மி அழுதாள். குனிந்து கொண்டு.. திகைப்புற்ற அக்காவிடம் கேட்காமலேயே பக்கத்தில் நின்ற மஞ்சு—''கோமதி பெயிலாயிட்டா'' என்றாள். அக்கா இடிந்துபோனாள்.

## 1-ம் ஆண்டு நினைவு அஞ்சலி

| தமிழ்த்தாய் கரங்களில் | | தமிழர்தம் மனங்களில் |
|---|---|---|
| 29 — 09 — 1967 |  | 18 — 06 — 1992 |

### கப்டன் சந்தியா

(தேசிங்கம் யோகேஸ்வரி)

(கரணவாய் மேற்கு, இமையாணன்)

ஏங்கியிரந்து இடர்பல பட்டுத்—தமிழ்
இனமது அழியும் நிலைதனைக் கண்டு
தூங்கா வலிமையொடு துன்பந் துடைத்திட
தானைத் தலைவன் படையணி சென்றாய்
மங்காப் புகழுடன் எதிரியை வென்று
கோட்டை வாசலில் நின்ற வேளையில்
சந்தியா! உன்னைக் குண்டு துளைத்ததே—நீ
சிந்திய குருதியால் தாயகம் பிறக்கும்.

18-06-93 —குடும்பத்தினர்

(5157)

## விடுதலைக்காய் ஏங்குகின்றோம்


தேனோடும் திருநாடு பாரீர் – தென்
தமிழீழக் கதையை கொஞ்சம் கேளீர்
வந்தாரை வாழவைத்து நின்றோம் – இன்று
வாழ்வதற்காய் போராடுகின்றோம்.

கண்முன்னே உறவுகளை இழந்தோம் – ஒரு
கணப்பொழுதில் இருப்பதனை இழந்தோம்.
வீடெல்லாம் காடாகிப் போச்சு – அந்த
காடேதான் வீடு என்று ஆச்சு.

ஊரெங்கும் அழுகுரல்கள் கேட்கும் – என்றும்
உடலெங்கள் வீதியினில் வேகும்
ஊரழுத கண்ணீரில் ஓடம் – எம்
உறவுகளைத் தினம் தேடிப் போகும்.

வாயார நெய் அரிசி உண்டோம் – இன்று
வாய்க்கரிசி தேடி அலைகின்றோம்
வீரர்களைப் பிள்ளைகளாய்ப் பெற்றோம் – நாம்
விடுதலைக்காய் தினம் ஏங்குகின்றோம்.

—யோகரத்தினம் யோகி.




# பூமியை நனைக்காத பேச்சு மழை

எல்லாமே நேற்றுப்போல் நிழலாடுகின்றது. என்றாலும், அடுத்த மாதத்துடன் வெளிச்சத்துக்கு இரண்டு வயது முடிகின்றது 'வெளிச்சம்' ஆரம்பிக்கப்பட்டபோது "எமது தமிழீழ விடுதலைக்கான போராட்டம் உச்சக்கட்டத்தில் இருக்கும்போது பிறப்பெடுக்கும் 'வெளிச்சம்' விடுதலைபெற்ற சுதந்திர தமிழீழத்திலும் தொடர்ந்தும் வெளிவரவேண்டுமென்ற பெரிய கனவு எங்கள் நெஞ்சுக்கொடியில் பூத்திருக்கின்றது'' என்ற கருத்தைக் கூறியிருந்தோம். இது வெறும் கனவல்ல; நாளை நடக்கப்போகும் நிஜம்.

விடுதலையின் பெறுமானத்தைப் புரிந்துகொண்டும், போராட்டத்தின் அவசியத்தைத் தெரிந்துகொண்டும், பல படைப்பாளிகள் வெளிச்சத்தைப் பார்க்கத் தங்கள் விழிகளைத் திறந்துள்ளனர். கலை இலக்கியங்களை எங்கள் மண்ணின் போராட்டத்தை நோக்கி நகரவைத்த பணியில் வெளிச்சத்துக்குக் கணிசமான பங்குண்டு. ஆனால், இம் மண்ணின் மேடைப் பேச்சுத்துறை அல்லது பேச்சுக் கலை — கலை இலக்கியங்களின் போக்குக்கு மாறாக, உலக ஒத்திசைவுக்கு எதிராக எமது போராட்டத்தின் செல் வழியில் செல்லாது தடம் மாறிப் போவதை எம்மால் அவதானிக்க முடிகிறது. இது வெளிச்சத்துக்கு வியப்பையும், கவலையையும் தருகிறது.

கலைஞர்களுக்கும், இலக்கியப் படைப்பாளிகளுக்கும் இருக்கும் சமூகப் பொறுப்பை அவர்கள் தங்களால் முடிந்தளவு நிறைவேற்றுவதுபோல, புதிதாக இங்கு தோற்றம் கட்டி வளர்ந்துவருகின்ற பேச்சுத்துறையாளர்களும், தமிழீழத்தின் உண்மைக்கு உரித்துடையாளர்களாக வேண்டும் என்று வெளிச்சம் விரும்புகின்றது. ஆனால் இந்தப் பேச்சுக் கலை மாயக் கண்ணாடி மர்மம்போல, வெறும் கிளுகிளுப்பைக் கொடுக்கும் சில்லிடும் தன்மைபோல திசை மாறிக்கொண்டிருக்கிறது.

கோவில் திருவிழாக்களிலும், சமூகத்தின் பொது விழாக்களிலும் பேச்சு, பிரசங்கம், சொற்பொழிவு, கருத்துரை பட்டி மண்டபம், வழக்காடு மன்றம், சுழலும் சொற்போர் என்று பலபல வடிவங்களாகப் பேச்சுக்கலை வளர்ந்து கொண்டிருப்பது போலத் தோற்றம் காட்டி, கருத்துநிலையில் தேய்ந்துகொண்டிருக்கின்றது.

பேசும் பேச்சாளர்களில் பலர் இந்த மண்ணின் உயிர்த்துடிப்பை நாடிபார்த்தறியாது சொற்சிலம்பமாடுகின்றனர். பழைய 'ஆனந்தவிகடன்' பகடிகளை தொகுத்தளிக்கின்றனர். எமது தாயகத்தின் உயிரனைய விடுதலைப் போராட்டத்தை உளப்பூர்வமாக ஏற்று அதை மக்களுக்குச் சொல்ல வேண்டிய கடமையுடைய மேடைப் பேச்சாளர்கள் வரலாற்றுப் பணியைப் புறந்தள்ளிவிட்டு மீண்டும் மீண்டும் "சீதையின் கால் விரல்களைவிட கைவிரல்களே அழகானவை'' என்றும், "வீமனை விட அருச்சுனனுக்கே விலா எலும்பு பலமானது'' என்றும் பட்டிமண்டபம் நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.

"இலக்குவன் சென்றிக்கு நின்றான்'' "இராமன் ஒரு கெரிலாப்போராளி'' என்ற மாதிரி வழக்காடுமன்றம் நடாத்துகின்றனர்.

அண்மையில் ஒரு கோயில்திருவிழா தொடர்விரிவுரையில் 'சொற்பொழிவுத் தென்றல்' ஒருவர், "கோமாதா பூஜை செய்வதால் பெண்களுக்கு அடக்கப்பண்பும் சாத்வீக குணமும் ஏற்படும். கணவனுக்கு அடங்கி வாழும் அழகு வரும். இன்று கோமாதா பூஜையை செய்யாத காரணத்தால் தான் எங்கள் பெண்கள் போர்க் கோலம் பூண்டு நிற்கின்றனர்? என்று திருவாய் மலர்ந்ததைக் கேட்டு எங்கள் காதுகள் அதிர்ச்சிக்குள்ளாயின: செவிப்பறைகள் அதிர்ந்து ஒரு தடவை அக்கினி பற்றிக் கொண்டது.

"பெண்கள் போராடும் பூமி. புதிய வரலாறொன்றைப் பெண்கள் வடிவமைக்கும் நாடு'' என்று எம்மண்ணைப் பார்த்து உலகம் வாயில் விரலை வைத்து அதிசயித்துவிட்டு, வாழ்த்துப்பாடிக் கொண்டிருக்கும் நேரத்தில், இங்கே விதைக்கப்படும் கருத்துக்கள் இப்படி அமைந்தது எப்படி? இதற்கு யார் பொறுப்பு? இவ்வளவு தூரம் உலக ஒத்திசைவுக்கு மாறாக எம் மண்ணின் பேச்சுக்கள் இருக்கின்றனவே என்று வெளிச்சம் வேதனைப் படுகின்றது.

மதத்துக்கோ அல்லது மரபு வழி இலக்கியங்களுக்கோ, திருவிழாவுக்கோ வெளிச்சம் எதிரானதல்ல. ஆனால், இங்கே சொல்லப்படும் கருத்துக்கள் எமது விடுதலைப் போருக்கு ஊறு விளைவிப்பனவாக அமையக் கூடாது என்று ஒரு தாழ்மையான விண்ணப்பத்தை, பேச்சைத் தொழிலாகக்கொண்டவர்களுக்கு வெளிச்சம் விடுகின்றது. எழுத்தாளர்கள், கலைஞர்கள் போல் பேச்சாளர்களையும் இணைய வேண்டுமென வெளிச்சம் விரும்புகின்றது.

நன்றி: வெளிச்சம்




(சி-6794)


பருத்தித்துறை நகராட்சிமன்றம்
மாட்டிறைச்சிக்கடைக் குத்தகைக்கான

## கேள்வி அறிவித்தல்

**01.07.1993ந்திகதி தொடக்கம் 31.12.1993ந்திகதி வரை**

மேற்காட்டிய குத்தகை சார்பில் 01-07-1993ந்திகதி தொடக்கம் 31-12-1993-ந்திகதி வரைக்கான காலப் பகுதிக்குரிய கேள்விகள், 24-06-1993-ந் திகதி நண்பகல் 12.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரங்கள் இந்நகராட்சிமன்ற அலுவலகத்தில் 23-06-1993-ந் திகதி பிற்பகல் 3.00மணி வரை மீளளிக்க முடியாத படிவக்கட்டணம் ரூபா. 150/-ம் மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புப்பணம் ரூபா. 1500/-ம்பணமாகச் செலுத்துவதன் பேரில் வழங்கப்படும்.

கேள்விப் பத்திரங்கள் இணைப்பிரதிகளில் "செயலாளர், நகராட்சிமன்றம், பருத்தித்துறை'' என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிடப்பட்டுத் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "மாட்டிறைச்சிக்கடைக்கான கேள்வி-1993'' எனத் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். அல்லது அதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரியநேரத்திற்குமுன் இடப்பட வேண்டும்.

இக்குத்தகைக்கான ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆகக் குறைந்த கேள்வித்தொகை ரூபா. 43,000/-ஆகும்.

இது சம்பந்தமான நிபந்தனைகளையும் மேலதிக விபரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

க. சண்முகநாதன்
செயலாளர்
நகராட்சிமன்றம்,
பருத்தித்துறை.

நகராட்சிமன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
09-06-1993 (சி/6848)


## உயிர் காக்கும் பேபி லொக் - 800

குறைப் பிரசவத்தில் பிறக்கும் குழந்தைகளைக் காப்பாற்றுவதற்கு "பேபி லொக் 800'' என்ற பெயரில் ஜேர்மனி நகரிலுள்ள நிறுவனமொன்று சாதனமொன்றைக் கண்டு பிடித்துள்ளது எடை குறைவாகவும் (500 கிராம்) மூச்சு விடச் சிரமமாகவிருக்கும் குறைப் பிரவச குழந்தைகளுக்குத் தேவையான ஒட்சிசனை இந்தச் சாதனம் வழங்குவதுடன் சுவாச உறுப்புக்களைப் பரிசோதிக்கும் தகவல்களையும் தருகிறது.

இதிலுள்ள சிறப்புச் சாதனங்கள் இன்குபேட்டரில் உள்ள குழந்தையின் இதயத்துடிப்பு இரத்த அழுத்தம், உஷ்ணம் முதலியவற்றைப் பரிசோதித்து மணிக்கு மணி முடிவை இதில் பொருத்தப்பட்டுள்ள திரைக்கு அனுப்பிக் கொண்டே இருக்கும். அதே சமயம் குழந்தையின் உடல் நிலை கடந்த 24 மணி நேரத்தில் எப்படி இருந்தது? என்ற விபரத்தையும் திரையில் காட்டும். இதனால் டாக்டர்கள் நன்கு ஆராய்ந்து புதிய புதிய முடிவை உடனுக்குடன் எடுத்துக் குழந்தையைக் காப்பாற்றி விடலாம்.

## காரில் நீச்சல்குளம்

கார் உற்பத்தியில் புதிய சாதனையொன்று ஜப்பானில் நிகழ்ந்துள்ளது. நீச்சல் குளம் போல் அமைக்கப்பட்டுள்ள கார் ஜப்பானிய நிறுவனமான ஹோண்டா நடத்திய போட்டியில் புதிய வடிவத்திற்கான பரிசைப் பெற்றுள்ளது. நீச்சல் குளம் போல் அமைக்கப்பட்டிருக்கும் இந்தக் காரிலுள்ள 'டிக்கியை' தூக்கிவிட்டு குளிக்கலாம். பின்மூடிவிட்டு காரை ஓட்டிக் கொண்டு பயணத்தைத் தொடரலாம்.

# “தேநீர்க் கடை மருந்து வியாபாரமும் மருந்தாளர் இல்லாத பார்மஸியும் ஒன்றுதான்”

**தொகுப்பு: மதன்**

யாழ் குடாநாட்டிலுள்ள ஆங்கில மருந்துக் கடைகளில் பயிற்சி பெற்ற மருந்தாளர்கள் இல்லாது இருப்பது, டாக்டர் வழங்கும் சிட்டையிலுள்ள மருந்துப் பொருள்களை விட்டுத் தவறான மருந்துகளை விற்பது, உயிருக்கே விஷமாகும். தடை செய்யப்பட்ட மருந்து வியாபாரம், இரசாயனப் பெயர், வர்த்தகப் பெயர், மருந்துப் பெயர், வேதியர் பெயர் தெரியாததும், காலாவதியாகும் திகதி குறிப்பிடப்படாத பொலித்தீன் உறைகளில் பொதி செய்யப்பட்ட மருந்துகளைக் கொள்வனவு செய்து விற்பது மற்றும் ஆங்கில மருந்து வர்த்தகங்கள் எதிர்நோக்கும் இன்னோரென்ன பிரச்சினைகள் குறித்து சுகாதார சேவைகள் பிராந்திய பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற மகாநாட்டில் ஆராயப்பட்டது.

சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் டாக்டர் பொ இரத்தினசபாபதி தலைமையில் நடைபெற்ற இந்த மகாநாட்டில், சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகள் மற்றும் பத்திரிகையாளர் கலந்து கொண்டனர். மகாநாட்டில் ஆலோசனை கலக்கப்பட்டதுமல்லாமல், ஆங்கில மருந்து வியாபாரத்தில் உள்ள குறைபாடுகளைத் தீர்க்க ஓரளவு வழியும் காணப்பட்டது.

பாதுகாப்பான, புத்திசாலித்தனமான மருந்து வியாபாரத்துக்கு ஆங்கில மருந்து வர்த்தக நிலையங்களில் பயிற்றப்பட்ட மருந்தாளர்களின் சேவை அவசியம். மருந்தாளர்கள் இல்லாத ஆங்கில மருந்து வர்த்தக நிலையங்களினால் நோயாளர் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். டாக்டர் சிபாரிசு செய்யும் மருந்து ஒன்றாக இருக்க மருந்து வர்த்தக நிலையங்களில் வழங்கப்படும் மருந்தோ வேறொன்றாக இருக்கின்றது. இதனால் பின்விளைவுகள் ஏற்படக்கூடிய ஆபத்து உள்ளதுஎன்று பிராந்திய பணிப்பாளர் டாக்டர் பொ. இரத்தினசபாபதி எச்சரித்தார்.

### நோயாளர் நலன் பாதுகாப்பு:

ஆங்கில மருந்து வர்த்தகத்தில் உள்ள குறைபாடுகளுக்குக் காரணம் என்ன? சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் சார்பாக உணவு மற்றும் மருந்துக் கட்டுப்பாட்டு அதிகாரி திரு. த. மகாதேவன் கூறுகிறார்.

தவறான மருந்துகளை விற்கும் ஆங்கில மருந்து விற்பனை நிலையங்கள் மீது சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் பணிமனை தீவிர கவனம் செலுத்தப் போவதாக சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் ஒரு பத்திரிகைச் செய்திக் குறிப்பு வெளியிட்டிருந்தார். இந்தச் செய்திக் குறிப்பினை நாம் ஏன் வெளியிட வேண்டும் என்று நீங்கள் கேட்கலாம். ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களின் வியாபார நடைமுறைகள் குறித்து பொது மக்கள் செய்த முறைப்பாடுகளை அடுத்தே நாம் இவ்வாறு செய்தோம். வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தக சங்கத்தினரான நீங்கள் எமது பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு இந்தக் கூட்டத்துக்கு ஒழுங்கு செய்தீர்கள்.

யாழ்ப்பாணம் இன்றிருக்கிற நிலையில் வைத்தியர்கள் தான் தெய்வம். அவர்களுக்கு அடுத்த நிலையில் ஆங்கில மருந்து விற்பனையாளர்களாகிய நீங்கள் உள்ளீர்கள். இப்போது பண நெருக்கடி காரணமாக நோயாளர் சுயமாகவே மருந்து வாங்கிச் சாப்பிடுகிறார்கள். டாக்டர்களின் சிட்டை இல்லாமல், உடல் நலக்கேடு உள்ளவர்கள் தனியார் மருந்து விற்பனை நிலையங்களை நாடுகிறார்கள். நீங்கள் பிழையான மருந்துகளைக் கொடுத்திருக்கிறீர்கள். இது தவறான விஷயம். நோயாளர் நலன் பாதுகாக்கப்படவேண்டும். மருந்துப் பொருள்களைப் பற்றித் தெரியாமல் அதனை விற்பனை செய்தால் விளைவுகளை நாம் பொறுப்பேற்க வேண்டும். யாழ். குடாநாட்டில் 56 பார்மஸிகள் உள்ளன. மருந்து விற்கும் நிலையங்கள் எல்லாம் பார்மஸிகளும் அல்ல. ஐந்து அல்லது ஆறு ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் தான் மருந்தாளர்சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். வேறு ஏழு எட்டு மருந்து விற்பனை நிலையங்கள், மருந்தாளர் இருப்பதாகத் தெரியப்படுத்தி பதிவுக்கு விண்ணப்பித்துள்ளன.

### புரிந்து கொள்ள முடியவில்லையே:

அவர் தொடர்ந்து கூறினார். அது இதுதான் -

மருந்துப் பொருள்கள் A,B C, என்று அட்டவணைப் படுத்தப்பட்டுள்ளன. 2B அட்டவணை மருந்துகளை டாக்டர்களின் சிட்டை இல்லாமல் விற்கக் கூடாது என்று பிரமாணங்கள் கூறுகின்றன. இந்த மருந்து வகை உடல் நலனுக்கு எவ்வளவு பாதகத்தை ஏற்படுத்தும் என்பதைப் புரிந்து கொள்ள முடியவில்லையே. இது விஷயத்தில் ஒரு பயிற்றப்பட்ட மருந்தாளரின் முடிவுதான் ஒரு சரியான முடிவாக இருக்க முடியும்.

மருந்துகள், பல இடங்களில் குறிப்பாகத் திருநெல்வேலிச் சந்தியில் நடைபாதையில் விற்பனை செய்யப்படுகின்றன. மேலும் மருந்துகள் பக்குவமாக களஞ்சியப் படுத்தப்படவேண்டும். அநேகமான ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் மருந்துகள் உரிய முறையில் களஞ்சியப் படுத்தப்படாததை அவதானிக்க முடிகிறது. இந்தப் பொருளாதார நிர்ப்பந்த காலத்தில், கூடிய விலை கொடுத்து மருந்து வாங்கும் நோயாளர்களுக்கு தரமான மருந்து வகைகளை மருந்து வர்த்தகர்கள் வழங்க வேண்டும் குளிர்சாதனப் பெட்டியில் பக்குவமாக வைக்காத ரொக்சயிட் மருந்தால் எவ்வித பயனுமில்லை. இந்த மருந்தைச் சாதாரண மருந்துகள் போல் வெளியில் வைத்து விற்பதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. பிழையான மருந்துகளும் வழங்கப்பட்டுள்ளன. பென்சிலினுக்குச்சிட்டைஎழுத டைசிபோமகொடுக்கப்பட்டிருப்பதாக யாழ்.போதனாவைத்தியசாலை குழந்தை வைத்திய நிபுணர் புகார் தெரிவித்துள்ளார். காலாவதியாகும் திகதி இல்லாத மருந்துகளும் விற்கப்படுகின்றன. பத்திரிகை கண்டனங்கள் கூட அசைவை ஏற்படுத்தவில்லை.

### பரபரப்பான விளக்கம்:

இந்த நிலையில் வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கப் பிரதித் தலைவர் ஒரு மன ஆதங்கத்தோடு பேச ஆரம்பித்தார்:

இன்று பல வருட அனுபவமுள்ள ஆங்கில மருந்து வர்த்தகர்களே பிழை விடாமல் இல்லை என்ற பிரதித் தலைவர், தேநீர்கடை மற்றும்

[8 ஆம் பக்கம் பார்க்க]

**இலங்கையில் தடைசெய்யப்பட்ட மருந்துகள் வருமாறு:**

| | |
|---|---|
| என்ரோவைபார்ம் | Entero Vioform |
| பீனைல் பியூற்றாசோன் | Phenyl butazone |
| பன்சிடார் | Fonsidar |
| அம்மினோன் போட்டே | Ammenon forte |
| கியூமறெற் போட்டே | Cumeret forte |
| ஈ.பீ. போட்டே | E. P. forte |
| பொன்பைறின் ஊசி | Bonpyrine inj |
| பரால்ஜின் ஊசி | Baralgin inj |
| கயோலின் + பெக்ரின் பாணி | Kaolin + Pectrin Syrub |

# கடல் ஆராய்ச்சியில் புரட்சி செயற்கை கோள்களின் அரும்பணி

பூமியைச் சுற்றிவரும் செயற்கைக் கோள்கள் கடல்கள் பற்றிய புதிய அறிவைப் பெறுவதற்கு கடல் ஆராயச்சியாளர்களுக்கு சக்திவாய்ந்த கருவிகளாக மாறியுள்ளன. பூமியின் 70சதவீத பரப்பை கடல் கொண்டுள்ள போதும் கடல் பற்றிய ஆராய்ச்சிகள் மிகக்குறைவாகவே நடாத்தப் பட்டுள்ளன. உணவுத் தேவை மற்றும் சக்திவளங்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு என்பன கடல் ஆராய்ச்சியில் கவனம் செலுத்த இன்று காரணமாகியுள்ளன.

டைரோஸ். நிம்பஸ் -7, சீசாட் ஆகிய மூன்று செயற்கைக் கோள்கள் 1978ஆம் ஆண்டு செலுத்தப்பட்ட போது செயற்கைக்கோள்மூலமான கடலாய்வு முழுமையாக ஆரம்பிக்கப்பட்டது எனலாம். இச் செயற்கைக்கோள்கள் ஒவ்வொன்றும் கடலைக் கண்காணிப்பதற்கான கருவிகள் இணைக்கப்பட்டவை. டைரோஸ், நிம்பஸ் - 7 என்பன முக்கியமாக வானிலை ஆய்வுக்கென ஈடுபடுத்தப் படுகின்ற போதிலும் “சீசாட்” கடல்துறை ஆய்வுக்கென முற்றுமுழுதாக ஈடுபடுத்தப்படுகின்ற ஒரு செயற்கைக் கோளாகும். இது எப்படிப்பட்ட காலநிலையிலும் தொழிற்படுகின்ற நுண்அலை உணர்வு கருவிகளைகொண்டதாகும்.

கடல் ஆய்வாளர்கள் முன்னர் மிதவைகளிலிருந்து பெறப்படுகின்ற தகவல்களையே கடலாராய்ச்சிக்குப் பெரிதும் நம்பியிருந்தனர். ஆனால் இன்று இச்செயற்கைக் கோள் மூலம் துல்லியமான தகவல்களைப்பெறும் நிலையை அடைந்துள்ளனர். மிகமுக்கியமாக உலகச் சுற்றுச் சூழல் மீதும், பருவகாலங்கள் மீதும் கடல்கள் எவ்வித விளைவை உண்டாக்குகின்றன என்பது பற்றி இப்போது கடல் துறை அறிவியலாளர்களால் துல்லியமாக அளவிட்டறிய முடிகிறது.

செயற்கைக் கோளிலிருந்து பெறப்படும் புள்ளி விபரங்கள் வழக்கமான முறைகள் மூலம் அறிய முடியாத தகவல்களை மூன்று வழிகளில் அளிக்கின்றன.

ஒன்று, அவை ஒரே உணர் கருவியைக் கொண்டு திரும்பத் திரும்ப பல ஆண்டுகாலத்திற்கு உலகம் தழுவிய முறையில் தகவல்களை அளிக்கும். ஆனால் உலகின் கடல்களில் ஏற்பட்டு வரும் மாற்றங்களை பிற வழிகளில் பெறுவதென்றால் அவ்வித மாற்றங்கள் நிகழக்கூடிய இடங்களிலெல்லாம் சாத்தியமாகா அளவுக்கு பெரும் எண்ணிக்கையில் கருவிகளை நிறுவவேண்டும்.

இரண்டாவது, அவை கடற்பரப்பின் பெரும் பகுதியைப் பற்றிய ஒட்டு மொத்தமான காட்சியை உடனுக்குடன் அளிக்கின்றன. ஓயாது மாறிக்கொண்டேயிருக்கும் கடலினை கப்பல் மூலம் வழக்கமான முறைகளில் ஆராய்வதென்றால், கடலின் மாறுதலுக்கு உள்ளாகும் தட்பவெப்பங்கள் அந்தந்தக் கணங்களில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதை அறியமுடியாது.

மூன்றாவதாக, கடல் மேற்பரப்பின் “அலைவுக்கோலங்கள்” போன்ற சிலவற்றை இச்செயற்கைக் கோள்களிலுள்ள நுண் அலை கருவிகளால் தவிர வேறெந்த முறையாலும் அளவிடமுடியாது.

கடலின் மேற்பரப்பிலிருந்து மின்காந்தக் கதிர்கள் வெளிப்படுகின்றன, அல்லது பிரதிபலிக்கப்படுகின்றன. மேற்பரப்புக்கு அடியிலுள்ள நிலைமைகள் இக்கதிர் வீச்சு மீது பாதிப்பை ஏற்படுத்துகின்றன. அவ்வாறு பாதிப்புக்கு உள்ளான மின்காந்தக் கதிர்களை அளவிடுவதன் மூலம் கடல் மேற்பரப்புக்கு அடியிலுள்ள நிலைகளை ஊகிப்பதுதான் இவ்ஆராய்ச்சியின் அடிப்படை அம்சமாகும். இவ்விதம் அறிவதென்றால் கடலின் மேற்புறப் பகுதியில் நிகழும் இயக்கங்கள் பற்றி நன்கு அறிந்திருக்கவேண்டும்.

உதாரணமாக செயற்கைக் கோள்கள் மூலம் கடலின் நிறத்தை அறிவதால் நேரடியாகப் பயன் ஏதுமில்லை ஆனால் அந்த நிறத்தைநிர்ணயிக்கின்ற சில அம்சங்கள் முக்கியமானவை. கடல்நீரிலுள்ள தாவரங்களின் பச்சையமானது கடல் நீரின் நிறத்தில் பச்சை, நீல நிறங்களிடையிலான விகிதத்தை நிர்ணயிக்கிறது. கடலின் நிறத்தைவைத்து சிலமீட்டர் ஆழம்வரையில் பச்சையம் எந்த அளவுக்கு உள்ளது என கண்டறிய முடியும். கோட்பாடுகளை மனதில் கொண்டு கவனமாகத் திட்டமிட்ட பரிசோதனைகள் மூலம் இதற்கான வழிமுறைகளை உருவாக்க முடிந்துள்ளது.

இதே போல், நீரில் கலந்து நிற்கும் வண்டல்களின் அளவை நீரின் நிறத்தை வைத்து ஓரளவிற்கு கண்டறிய முடியும். ஆழங்குறைந்த கடற்பகுதிகளைப் பொறுத்தவரையில் நீரின் நிறத்தைவைத்து கடல் ஆழத்தையும் இதேபோல ஓரளவிற்கு நிர்ணயிக்க முடியும்.

கடல் பொங்கி எழும் நீரின் உயரமானது செயற்கைக் கோளிலிருந்து அனுப்பப்படும் சைகைகள் கடலை அடைந்துவிட்டு மீண்டும் வந்து சேருவதற்கு ஆகுகின்ற நேரத்தைக் கணக்கிடுவதன் மூலம் அளவிடப்படுகின்றது. எதிரொலித்து வரும் சைகையின் வடிவத்தைக்கவனித்தால் கடல் எந்த அளவு கொந்தளிப்பாக உள்ளது என்பது தெரிய வரும். அலை உயரத்தை அறிவது கடல் போக்குவரத்துக்கு மிக அவசியம்.

செயற்கைக் கோள்கள் மூலம் பெறப்படும் புள்ளிவிபரங்கள் உலகின் அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த கடலியல் வல்லுநர்களுக்கு மிகப் பயனுள்ளவை. மேலும் இதன் மூலம் உயிரினவளம், மீன்வளம் கடல் போக்குவரத்து, கடலரிப்பு ஆகியவற்றை நிர்வகிப்பதற்குத் தேவையான வகையில் சுற்றுச் சூழலைக் கண்காணிப்பதற்கு தனியொரு வழி முறையை அளிக்கிறது.

இவ்வாறு கடல் எல்லையைக் கொண்ட ஒவ்வொரு நாடும் தனது கடற்பகுதியை நிர்வகிப்பதற்குத்தேவையான அரிய தகவல்களை பெறக்கூடியதாக செயற்கைக் கோள்கள் தொழிற்படமுடியும்.

# தேநீர்க்கடை

நடைபாதை மருந்து வியாபாரத்தை மூட அனுமதிக்கின்றோம் என்றார். ஆனால் ஆரம்பித்து வியாபாரம் தொடங்கிய கடைகளை மூட அனுமதியோம்.

புதிதாக ஆரம்பித்து வியாபாரம் தொடங்கிய ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களை மூடவேண்டாம் என்று நீங்கள் கேட்கலாம்; அதற்கு எனது விளக்கம் இதுதான்:

பார்மஸி என்று பெயர்ப் பலகை போட்டவர்கள் தவறான மருந்தை விற்கவில்லையா? தடை செய்யப்பட்ட மருந்தான பினைல் பியூற்றாசோன் இப்போதும் விற்பனையாகின்றதே. தேநீர்க்கடை மருந்து வியாபாரமும் மருந்தாளர் இல்லாத பார்மஸியும் எமக்கு ஒன்றுதான்.

— இவ்வாறு பதிலளித்தார் சுகாதார சேவைகள் பிராந்தியப் பிரதிப் பணிப்பாளர்.

கருவுற்ற தன்மையைப் பரிசோதிக்கும் கியூமறெற்போட்டே. ஈ. பீ போட்டே ஆகிய மருந்துகள் தடைசெய்யப்பட்டவையா என்று செய்தியாளர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கப் பிரதித் தலைவர், அந்த மருந்துகள் தடைசெய்யப்பட்டவை என்ற வர்த்தமானி அறிவித்தலைக் காட்டாதவரை சங்கத்தினர் அந்த மருந்தை விற்பனைசெய்யப்போவதாகப்பதிலளித்தார்

இந்த மருந்துக்கும், வியாபாரத்துக்கும் தொடர்பு இருக்கிறதா என்று கேட்டால், இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம் என்கின்ற இரண்டுங்கெட்டான்பதிலைத்தான் சங்கப் பிரதித் தலைவரிடமிருந்து கேட்கவேண்டியிருந்தது. ஆனால், இந்த மருந்தைப் பாவிப்பதன்மூலம் குழந்தைகள் கால், கை இல்லாமல் (Congenital abnormalities) பிறக்கும் என்பதையும், கருவுற்ற தன்மையைப் பரிசோதிக்க வேறு வழியிருக்கும்போது இந்த மருந்தைத் தவிர்க்கவேண்டும்என்று மருத்துவ உலகம் உறுதியாகக் கூறுகின்றது.

அதற்குப் பிறகு, சமயம் பார்த்துக்குறுக்கிட்டசுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் (The Prescriber ஜூன் 1975)என்றமருத்துவசஞ்சிகையைப் படித்துக்காட்டி, இந்த மருந்து தடை செய்யப்பட்டதென்பதை உறுதிப்படுத்தினார். ஆபத்தான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய இந்த மருந்தை நீங்கள் தடையையும் மீறி வியாபாரம்செய்தால், அதனைப் பறிமுதல் செய்து உரிய தண்டனை வழங்கப்படும் என்று உணவு மற்றும் மருந்துக்கட்டுப்பாட்டு அதிகாரிஎச்சரித்தார். ஆனால் இந்த மருந்தை ஆயுர்வேத வைத்தியர் எழுதுவதாக ஆங்கில மருந்து வாத்தக சங்கபிரதித் தலைவர் சுட்டிக்காட்டியதுடன், இன்றைய சூழலில் நாம் நெளிந்து சுழிந்துகொடுக்க வேண்டும் என்றார். மருந்துகளினால் ஏற்படக்கூடிய அபாயத்திலிருந்து மக்களைக் காப்பாற்றத்தான் இந்தக் கூட்டம் என்று கூறிய சுகாதார சேவைகள் பணிமனைத் தரப்பினர், ஆயுர்வேத வைத்தியருக்கு ஆங்கில மருந்து விற்பது தடை செய்யப்பட்டுள்ளதென்றும், அவர்களுக்கு ஆங்கில மருந்து விற்பது நிறுத்தப்படவேண்டும் என்றும் கூறினர். இந்த விவாதத்தில் முட்டாமல் கூட்டத்திலிருந்த ஆங்கில மருந்து வர்த்தகர் பலர் ஒதுங்கிக்கொண்டனர்.

## பல்கலைக்கழகத்தில் மருந்தாளர் பயிற்சி:

சிறிலங்கா அரசு எமக்கு விரோதமாகச் செயற்படுகிறது. இந்த நிலையில் மருந்தாளர் பயிற்சிக்கு நாம் கொழும்பை எதிர்பார்க்க முடியாது. நிலையைச் சீரமைக்க நாமே யாழ் பல்கலைக்கழகத்தின் உதவியுடன் மருந்தாளர் பயிற்சி நெறியை ஆரம்பிக்க உள்ளோம் என்றார் ஆங்கில மருந்து வர்த்தகர் சங்கம் பிரதித் தலைவர் யாழ் பல்கலைக்கழகம் புறநிலைப் படிப்புகள் அலகு உதவியுடன் ரூபா 40,000செலவில் இந்தப் பயிற்சியை நடத்துவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. புறநிலைப் படிப்புகள் அலகு சார்பில் இதற்கான விண்ணப்பங்களை நாம் கோரியுள்ளோம். க.பொ.த. (சாதாரணம்) ஆங்கிலம், விஞ்ஞானப் பாடத்துடன் தேறியவர்கள் மருந்தாளர் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம் ஆக, இன்றைக்கு தமிழர்களுடைய நன்மை கருதி, ஆங்கிலமருந்து விற்பனை நிலையங்களில் மருந்தாளர் தேவை என்பதற்கு அதிக அழுத்தம் தராமல் கால அவகாசம் தரும்படி கேட்டுக் கொண்டார். மருந்தாளர் கற்கை நெறி புறநிலைப்படிப்புகள் அலகில் மூன்று நான்கு மாதங்கள் நடைபெறும் என்றும், கூறினார்.

தொலை நோக்குப் பார்வையோடு நீண்ட நேர விவாதத்தின் பின்னர், இரு தரப்பினரும் நடு நிலையோடும் மிகப் பொறுப்போடும் பின் வரும் முடிவுகளைஎடுத்தனர்.

- O அனைத்து ஆங்கில வர்த்தக நிலையங்களிலும் கட்டாயமாக மருந்தாளர் நியமிக்க வேண்டும். மருந்தாளர் இல்லாத இடத்து தற்காலிகமாக அப்போதிகரி மருந்துக்கலவையாளரை நியமிப்பது பற்றிப் பின்னர் யோசிக்கலாம்.
- O எல்லா மருந்துக் கடைகளிலும் மருந்துப்பதிவேடுகள் பேணப்பட வேண்டும். 2B ரக மருந்துகள் விற்பனை மருந்துப் பதிவேடுகளில் பதியப்படுவதன் மூலம் தவறான மருந்து விற்பனைகளைத் தவிர்க்கலாம்.
- O ஆயுர்வேத வைத்தியருக்கு ஆங்கில மருந்து விற்கக் கூடாது. டாக்டர்களின் ஒப்பம் மற்றும் முத்திரை இல்லாத சிட்டைகளை நிராகரிப்பது.
- O மருந்துகளைப் பாதுகாப்பாகக் களஞ்சியப் படுத்தல்.
- O ஒரு மருந்தாளரின் பெயர் மூன்று ஆங்கில மருந்து விற்பனை நிலையங்களில் பேணப்படுகின்றது. இம்முறையைத் தவிர்த்தல்.
- O தடை செய்யப்பட்ட மருந்து விற்பனையைநிறுத்துதல்.
- O அனுமதி இல்லாத மருந்து விறபனை நிலையங்களை மூடுதல்.
- O பொலித்தீன் உறைகளில் அடைத்த மருந்துகள் மற்றும் வவுனியாவில்இருந்து வழிவியாபாரிகள் எடுத்து வரும் மருந்துகளை வாங்காது தவிர்த்தல். உரிய மருந்து மொத்த விற்பனையாளரிடமிருந்து மருந்து வகைகளைக் கொள்வனவு செய்தல்.
- O ஆங்கில மருந்து மொத்த விற்பனை நிலையங்கள் மருந்து விநியோகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆங்கிலவைத்தியர், பல் வைத்தியர், மிருக வைத்தியர் பிற ஏனையோர் என்ற ஒழுங்கில் முன்னுரிமை வழங்குதல்.
- O மேற்படி நடைமுறைகளை மீறிச்செயற்படும் ஆங்கில மருந்துவிற்பனைநிலையங்கள் மீது நடவடிக்கை எடுத்தல்.

---

## 2-ம் ஆண்டு நினைவு நாள்

## அஞ்சலியும் - அழைப்பும்



### லெப்டினன்ட் காந்தல்

[சுப்பிரமணியம சிவகணேஷ்]

நெளுக்குளம், வவுனியா

| அன்னை மடியில் | ஆனையிறவில் |
|---|---|
| குலக் கொழுந்தாக | குல விளக்காக |
| 07-08-1972 | 10-07-1991 |

திதி: 18.06.1993

அன்னை மண் மீட்கவென - களம் புகுந்த வேங்கையே
ஆனையிறவுதனில் சங்கமித்தாய் - அன்னை மண்ணில்
மண்ணிற்கு வித்தான - மாவீரர் வரிசையிலே
ஈராண்டு சென்றதடா - நீ இணைந்து
விண்ணுலகில் வாழும் உன்னைக் காணத்துடிக்கிறோம்
விண்ணிலே பாதையில்லை - உன்னைத் தொட
ஏணியில்லை.

18-06-1993 இன்று எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவு நாள் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உன்னோடு களம் புகுந்து சங்கமித்த அனைத்து வேங்கைகளின் ஆத்ம சாந்திவேண்டி எம்முயிர் உள்ளவரை உன்பணி தொடர்வோம்.

தற்போதைய முகவரி:

வை. சுப்பிரமணியம், இல 40, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.

அப்பா, அம்மா, தங்கைகள்: கௌரி, லதா, பெரியப்பா குடும்பத்தினர்.

[5163]

---

யாழ். பல்கலைக்கழக

வெளிவாரி மாணவர்களுக்கான

## விரிவுரைகள்

பாடம் - நுண்கலை


விரிவுரையாளர் - செல்வி எஸ். கலா

ஆரம்பம் - 19. 06. 1993

விபரங்களுக்கு:

உதவிப்பதிவாளர்,
பட்டப்படிப்புகள் கல்லூரி,
148/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி-684 1)

---




ரேஸ்ரியின் சுற்றுப்போட்டியில் பங்கு பற்றுவதற்கான நிபந்தனைகள்:-

பியர், ஜாம் அல்லது கோடியல் போத்தல்களில் ஏதாவது ஐந்தைக் கொடுத்து அதற்குரிய பணத்தையும் அதற்குரிய அதிர்ஷ்டலாப சீட்டையும் பெற்றுக்கொள்ளவும். ஒவ்வொரு குலுக்கலும் மாதாந்த முடிவில் நடைபெறும்.

1 ஆம் பரிசு – சுவர்க்கடிகாரம்
2 ஆம் பரிசு – எவர் சில்வர் வீட்டுப் பாவனைப்பொருள்கள்.
3 ஆம் பரிசு - மாணவருக்கான பாடசாலை உபகரணங்கள்.
மேலும் பத்து ஆறுதல் பரிசுகள்

போத்தல்கள் ஒப்படைக்கவேண்டிய இடங்கள்:-

(1) ரேஸ்லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டெட் 14, சீனியர் வீதி, யாழ்ப்பாணம் (2) அறிவகம்-சாவகச்சேரி (3) சுபாஸ் பேக்கவுஸ்-நெல்லியடி (4) சுந்தரம் அன்சன்ஸ் சுன்னாகம் (5) சித்தி விநாயகர் நூல் நிலையம் ஏழாலை மேற்கு (6) சபாரிஸ் சுண்டுக்குளி (7) நீதினி Q சுன்னாகம் (8) செ. சுரேஸ் சோமசுந்தரப்புலவர் வீதி, நவாலி வடக்கு மானிப்பாய் (9) ஸ்கந்தா மாஸ்ரர் சங்கரத்தை சந்தி வட்டுக்கோட்டை (10) இ. இராசதுரை பத்திரிகை விற்பனை நிலையம் இருபாலை சந்தி. (11) விஸ்கம் கூல் பார் மானிப்பாய். (12) கந்தசாமி அன்சன், சங்கானை.

TASTELINE INDUSTRIES (PVT) LTD
14, SEENIAR LANE, JAFFNA.

(சி-6768)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 14 12.1957

மறைவு: 18.06.1992

செல்வி சௌபாக்கியவதி நவரத்தினராசா
(ஆசிரியை, யாழ்/வட இந்துமகளிர் கல்லூரி)

திதி: 07 07-1993

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத்துயில் கொண்ட — மங்கையே!
நீர் மறைந்து ஓராண்டு சென்றாலும்
உந்தன் நினைவு என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தி அடைவதாக!!

நின் பிரிவால் வாடும்
ஐயா, அம்மா, அண்ணாமார்,
மைத்துனிமார், மருமக்கள்,
உற்றார், உறவினர்கள்:

கணையந்தோட்டம்,
புலோலி கிழக்கு, பருத்தித்துறை. (சி-6856)

# கிழக்கு மாகாணத்தில் கருத்து கணிப்பு; புதிய ஜனாதிபதியும் இனப்பிரச்சினையும்

ஜனாதிபதி டி. பி. விஜயதுங்காவின் அரசாங்கம் இனப்பிரச்சினையில் மூக்கிய அம்சம் ஒன்று குறித்து முடிவொன்றிற்கு வந்துள்ளது. ஜனாதிபதியாகப் பதவி ஏற்று, சுமார் ஒரு மாதமாகிய நிலையில், புதிய ஜனாதிபதியின் இனப்பிரச்சினைக்கான தீர்வு என்ன என்ற கேள்வி பலரிடம் இருந்தும் எழுந்த வேளையில் இம்முடிவுவெளிவந்துள்ளது. பாராளுமன்ற தெரிவுக்குழு, வடக்கு-கிழக்கு இணைப்பிற்கு கிழக்கில் 'கருத்துக் கணிபபு' ஒன்று மேற்கொள்வதாக எடுத்துள்ள தீர்மானமே இதுவாகும்.

சுமார் இரண்டு வருடங்கள் கூடிக் கலைந்த பாராளுமன்றத் தெரிவுக் குழுவானது, புதிய ஜனாதிபதியாக டி. பி. விஜயதுங்கா பதவி ஏற்றபின் கூடிய முதலாவது கூட்டத்திலேயேஒருமுடிவை எடுத்துள்ளமையானது தெரிவுக்குழுவில் இதுவரை அரசாங்கக் கட்சி வகித்து வந்த பங்கை எவரும் புரிந்துகொள்ள உதவக் கூடியது ஆகும். இதே வேளை, சிங்கள எதிர்க் கட்சிகளைப் பொறுத்து, வடக்கு-கிழக்கு பிரிவினை என்பது ஏற்புடைய கொள்கை என்பதால், இக் கருத்துக் கணிப்பிற்கு அவை தமது மனப்பூர்வ சம்மதத்தை தெரிவித்தமையில் ஆச்சரியப்பட ஏது மில்லை.

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கை துண்டாடுவதென்பது சிங்கள ஆட்சியாளரின் திட்டவட்டமான முடிவு என்றாலும் பலம் பொருந்திய ஆட்சியாளர் எனக் கருதப்பட்ட ஜனாதிபதி பிரேமதாசா காலத்தில் செய்ய முற்படாததை பதவி ஏற்ற ஒரு மாத காலத்திற்குள் டி. பி. விஜயதுங்கா செய்ய முற்பட்டுள்ளார். இது அரசாங்கம் இனப்பிரச்சினை தொடர்பாக புதியதொரு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதையே வெளிக்காட்டுவதாகும்.

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்பதே சிங்கள ஆட்சியாளர்களின் சித்தாந்தமாகும். இச்சிந்தனையில், சிறிலங்காவின் முன்னாள் ஜனாதிபதிகள், தற்போதைய ஆட்சியாளர்கள், இராணுவத் தளபதிகள் என எவரிடமும் வேறுபாடுகள் எவையும் கிடையாது. தமிழர் தேசிய இனப் போராட்டம் ஆரம்பமான பொழுதிலிருந்து இன்றுவரை அவர்களிடம் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை.

ஆனால் மூன்றாண்டுகள் தொடராக இடம் பெற்ற இரண்டாம் கட்ட ஈழப் போரில் இராணுவவெற்றியின் சாத்தியப்பாடு குறித்து கேள்விகள் எழும்பியுள்ளன இதே வேளை மூன்றாண்டுப்போரில் இராணுவம் சந்தித்த பாரிய இழப்புக்கள் அவர்களின் போரிடும் மனோ உறுதியையும் பெரியளவில் பாதிப்படையச் செய்தது.


இந்நிலையில் வடக்கில் இராணுவம் நீண்ட, தொடரான யுத்தத்திற்கு தயாராவதற்கு சிறிதுகால அவகாசம் தேவையாக உள்ளது. ஆளணிகள் அதிகரிக்கப்பட வேண்டியுள்ளது. அத்தோடு, இராணுவத் தலைமையில் ஏற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டியவையாகவும், பாதுகாப்பு அதிகாரிகள் மட்டத்தில் காணப்படும் முரண்பாடுகள் நீக்கப்பட வேண்டியனவாகவும் உள்ளன.

எனவே தான் முழுப் பிரதேசத்திற்குமான இராணுவத் தீர்வு என்பதில் இருந்து சற்று மாற்றி இனப்பிரச்சினை குறித்து கொள்கை ஒன்றை வகுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இப்புதிய கொள்கையே நான்கு மாதத்தில் கிழக்கில் கருத்துக் கணிப்பு என்பதாகும்.

இது புதிய ஜனாதிபதியின் திட்டத்தில் உருவான இன்றைய அரசியல் சூழ்நிலைக்கு ஏற்ற அணுகு முறையா? அல்லது ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு முற்பட்ட அணுகு முறையின் தொடர்ச்சியா? என்பதில் சந்தேகங்கள் இருப்பினும் இவ் இரண்டு கேள்விகளிலும், ஓரளவு அர்த்தம் உள்ளதாகவே படுகின்றது.

டி. பி. விஜயதுங்காவின் ஆட்சியில் முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் கை பின்னணியில் உள்ளது என பல அரசியல் அவதானிகள் கருதுகின்றார்கள். இதனை வலுச்சேர்ப்பது போல், அண்மையில் யாழ்ப்பாணம் வந்து சென்ற சர்வதேச நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் ஆட்சியில் ஜே. ஆரின் பங்குபற்றிக் குறிப்பிடுகையில் ''கிழவனே பின்னால் உள்ளது'' என்றார்.

இதன் அடிப்படையில் இந்தியா - சிறிலங்கா சமாதான உடன்படிக்கையின் ஒருபகுதியான கிழக்கில் சர்வசன வாக்கெடுப்பை நடத்தும் முடிவிற்கு அரசாங்கம் சென்றுள்ளதாகக் கருதலாம். இந்நிலையில் ஆட்சி மாற்றத்தின்



டி. பி. விஜயதுங்கா

பின் அடிக்கடி பத்திரிகைகள் மூலம் பேசியுள்ள முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா தனது பழைய கொள்கையை வலியுறுத்திப் பேசியுள்ளமை இங்கு சுட்டிக் காட்டப்படக் கூடியதே.

ஆயினும் ஜே. ஆர். ஜெயவர்த்தனா இந்திய இராணுவத்தை வரவழைத்து இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முற்பட்டதினால் ஏற்பட்ட விளைவுகள் சிங்களவரால் இலகுவில் மறந்துவிடக் கூடியவை அல்ல. இந்நிலையிலேயே மீண்டும் இந்திய இராணுவம் குறித்து பேச்சு எழுந்த போது அதனை அரசாங்கம் திட்டவட்டமாக மறுக்கவேண்டி வந்தது.

இருப்பினும் இந்திய-சிறிலங்கா சமாதான உடன்படிக்கையையே அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு அடிப்படையாகக் கொண்டுள்ளது போல் தெரிகின்றது. அதில் இருந்தே தற்பொழுது அரசாங்கத்தின் புதிய கொள்கை உருவாகியுள்ளது.

இதன் அடிப்படையில் அரசாங்கம் இனப்பிரச்சினை குறித்து வகுத்துள்ள புதிய திட்டமானது கிழக்கை வடக்கில் இருந்து பிரித்து தனியான ஒரு அரசியல் அலகு ஆக்குவதென்பதாகும். இதற்கு ஒருவகையில், இராணுவ அழுத்தத்தையும், ஒருவகையில் சிங்கள முஸ்லிம் வாக்காளரின்பலத்தையும் பிரயோகிப்பதன் மூலம் ஒரு இராணுவ அரசியல் வெற்றியைப் பெற்றுவிட அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இதேவேளை, கிழக்கில் கருத்துக்கணிப்பு நடத்துவதென்பது, தெரிவுக்குழுவின் தீர்மானத்தின் அடிப்படையிலான ஓர் 'அரசியல் நடவடிக்கை' எனக்காட்டுவது அரசின் நோக்கமாகும். ஆனால் அடுத்த தெரிவுக்குழுவின் கூட்டத்திற்கு கிழக்குமாகாண இராணுவத் தளபதிகளை அழைத்துள்ளமையானது, கருத்துக் கணிப்பறியும் திட்டம் தெரிவுக்குழு இராணுவம் என்பனவற்றின் கூட்டுச் செயற்பாடு என்பதைக் காட்டுவதாகவே உள்ளது.

இதனை, தெரிவுக்குழுவின் கூட்டம் இடம்பெற்ற அதே தினத்தில் மட்டக்களப்பின் வடபகுதியில் 'முகுது சுலங்' -'கடல் தென்றல்'- என்ற இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டமை வெளிக்காட்டி நிற்கின்றது. மேலும் தெரிவுக்குழுவின் கோரிக்கைக்குக் காத்திராமலே மூன்று மாதத்தில் கருத்துக்கணிப்பு ஒன்றை நடத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கித் தருவதாக இராணுவம் அளித்துள்ள வாக்குறுதியானது இராணுவத் தீர்வின் ஓர் அலகாகவே கருத்துக் கணிப்பும் அதனுடன் இணைந்த தீர்வும் இடம்பெறவுள்ளது.

இதில் முக்கியமான அம்சம் என்னவெனில் இக் கருத்துக் கணிப்பை தமிழர்கள் எவரும் ஏற்கவில்லை என்பதே. கொழும்பில் உள்ள குழுக்களினாலே அன்றி கிழக்கு முஸ்லிம்கள் மத்தியில் ஓரளவு ஆதரவு பெற்றுள்ள முஸ்லிம் காங்கிரஸினாலோ இக் கருத்துக் கணிப்பை ஆதரிக்கவில்லை.

இதன் மூலம் சிறிலங்கா அரசாங்கம் தமிழ்க்குழுக்களுக்கு எதிராக மேற்கொண்ட இக் காலைவாரும் நடவடிக்கையானது அவர்களின் அரசியல் எதிர்காலத்தை பெரும் கேள்விக்குரியதாக்கியுள்ளது.

ஆனால், இவை எவைகுறித்தும் அரசாங்கம் அக்கறைப்படவில்லை. இராணுவத்தின் துணையுடன் ஒரு தீர்வைத் திணிக்க முற்படுகின்றது. இதன் விளைவு அரசாங்கம் எண்ணுவது போல் சாதகமாக இருக்க மாட்டாது.

அரசின் இத்திட்டம் எந்தளவிற்கு நடைமுறைச் சாத்தியமானது என்பது கேள்விக்குரியதே. ஏனெனில், கிழக்கு மாகாணத்தை இராணுவ ரீதியாக கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருதல் என்பது இன்று நேற்று ஆரம்பமான தொன்றல்ல. இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமான காலத்தில் இருந்து தொடக்கப்பட்ட ஒன்று. இது சிங்கள அரசியல் - இராணுவ தலைமைகளின் பெரு விருப்பும் கூட.

**ஜெயராஜ்**

ஆனால் அது சாத்தியமாகவில்லை. தற்போதைய இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சிசில்வைத்தியரெட்னா கடந்த வருட ஆரம்பத்தில் கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்காவுடன் ஏற்பட்ட முரண்பாட்டின் போதும் கூட மூன்று மாத காலத்தில்கிழக்கைகட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதாக சூளுரைத்தார். ஆனால் அது கூட சாத்தியமாகவில்லை.

அடுத்ததாக 1988ஆம் ஆண்டு தேர்தல் மூலம் உருவாக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணசபை', ஒருலட்சம் இந்திய இராணுவத்தின் உதவியுடனும் தனது அதிகாரத்தை விஸ்தரிக்க முடியவில்லை இந்நிலையில் புவியியல் ரீதியாக இணைந்துள்ள வடக்கு கிழக்கு மாகாணங்களை நிர்வாக ரீதியில் இலகுவாகத் துண்டாடி, தமிழரின் போராட்டத்தை வடக்குக்குள் சுருக்கி விடலாம் என சிறிலங்கா அரசாங்கம் எண்ணுவது தவறான கணிப்பீடாகவே இருக்கும்.

# ஏவுகணை உற்பத்தியில் இந்தியா - பாக். போட்டி

இந்தியாவும் பாகிஸ்தானும் புதியதோர் ஆயுதப் போட்டா போட்டியில் ஈடுபட்டிருக்கின்றன. இரு நாடுகளும் எல்லையோரங்களில் ஏவுகணைகளை நிலை வைக்கின்றன என்று உள்ளூர் பத்திரிகைகளும் பாதுகாப்புத்துறை அவதானிகள் வட்டாரங்களும் தெரிவிக்கின்றன.

2150 கிலோமீற்றர் வீச்சுக் கொண்ட (தரையில் இருந்து தரைக்கு ஏவப்படும்) ஏவுகணைகள் இந்திய இராணுவத்தின் பயன்பாட்டுக்காக கையளிக்கப்பட்டிருக்கின்றன என்றும் இந்த ஏவுகணைகள் பஞ்சாப் மாநிலத்தில் பாகிஸ்தான் எல்லையோரம் நிலை வைக்கப்பட்டிருக்கின்றன என்றும் ''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

'பிரித்வி' என்ற இந்த ஏவுகணை இந்திய தயாரிப்பாகும். 5 வருடங்களுக்கும் அதிகமான காலமாக இதை இந்தியா பரீட்சித்துப் பார்த்திருக்கின்றது. ஒரு தொன் வரையான எடைகொண்ட குண்டுகளை தாங்கிச் செல்லக் கூடிய சக்தி இவற்றுக்கு உண்டு எனவும் கூறப்படுகிறது.

''இந்துஸ்தான் டைம்ஸ்'' பத்திரிகையின் செய்தி குறித்து இந்தியபாதுகாப்புஅமைச்சின் பேச்சாளர் கருத்தெதுவும் கூறவில்லை. ஆனால் 'பிரித்வி' ஏவுகணை இவ் வருடம் இராணுவத்தின் பயன்பாட்டுக்கு தயாராக்கப்பட வேண்டுமென ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது என்று மாத்திரம் அவர் கூறினார்.

சீனாவிடம் இருந்து கிடைக்கும் உதவியுடன் பாகிஸ்தான் இராணுவம் எல்லையோரம் ஏவுகணைகளை நிலைவைத்து அதன் ஏவுகணைப் பிரிவுகளை விரிவுபடுத்தி வருகிறது இதற்குப் பதிலடியாகவே இந்திய இராணுவம் ''பிரித்வி'' ஏவுகணையை எல்லையோரம் நகர்த்தியிருக்கிறது என்று டில்லியில் இருக்கும் பாதுகாப்பு ஆய்வுகளுக்கானநிறுவனத்தின் இயக்குநரான ஜஸ்ஜித்சிங் தெரிவித்தார்.

அணுவாயுதங்களைத் தாங்கிச் செல்லக்கூடிய ஆற்றல் கொண்ட இருட்சின் சீன தயாரிப்பு எம் 11 ஏவுகணைகள் பாகிஸ்தானுக்கு கொண்டுவரப்பட்டிருப்பதாக கடந்த டிசம்பரில் அமெரிக்க புலனாய்வு அதிகாரிகள் தெரிவித்திருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.

இத்தகைய காரியம் எதுவும் நடைபெறவில்லை என்று பாகிஸ்தானும், சீனாவும் மறுத்திருந்தன. ஆனால் இந்தியாவுடனான எல்லையோரம் பாகிஸ்தானுக்குள் சீனத்தயாரிப்பு [கண்டம்விட்டு கண்டம் பாயும்] ஏவுகணைகள் நிலை வைக்கப்பட்டிருக்கின்றன என்று ஜஸ்ஜித்சிங் கூறுகிறார்.

இந்தியா இப்போது எல்லையோரம் நிலை வைத்திருப்பதாக பத்திரிகைகளினால் கூறப்படும் ''பிரித்வி'' ஏவுகணையின் வீச்சு எல்லைக்குள் பாகிஸ்தானின் பிரதான நகரங்கள் பலவும் இராணுவ நிலைகளும் வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

ஹாவ்ட்-3 என்று அழைக்கப்படுகின்ற ஏவுகணைகளை பாகிஸ்தான் இப்போது தயாரித்து வருகிறது. 800 கிலோமீற்றர் வீச்சுக்கொண்ட இந்த ஏவுகணையினால் பாகிஸ்தானில் இருந்து கொண்டே டில்லியை வந்தடைய முடியும் என்று ''டைம்ஸ் ஒப் இந்தியா'' செய்தியொன்றை வெளியிட்டது.

## வீரவணக்க கூட்டம்

[அரியாலை]

6ஆம் மாதங்களில் [ஜூன் மாதம்) வீரச்சாவடைந்த வலிகாமம் கோட்டத்தின் சங்கானை வட்டத்திற்குட்பட்ட மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் இன்று இரவு 8 மணிக்கு மாளிகாவத்தை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வீரவணக்கக் கூட்டத்தைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. (90)

## சம்பள கொடுப்பனவுகள்

லங்கா சீமெந்து நிறுவன ஊழியர்களின் ஏப்ரல் 93, மே 93 ஆகிய இரண்டுமாதச் சம்பளக் கொடுப்பனவுகள் இன்று முதல் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என கணக்காளர் அறிவிக்கிறார்.

## இசைவிழா

(குருநகர்)

திருமறைக் கலாமன்றம் யாழ். பிரதான வீதி மன்றக் கலையரங்கில் எடுக்கும் மூன்று நாள் இசைவிழா இன்று மாலை 5-30 மணிக்கு கோலாகலமாக ஆரம்பமாகிறது. (21)

# தென்பகுதி சிறைகளில் 190 தமிழர் உண்ணாவிரதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் என்ற சந்தேகத்தின்பேரில் கொழும்பில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ள சுமார் 190பேர் தம்மை விடுதலை செய்யக்கோரி நேற்று உண்ணாவிரதத்தை ஆரம்பித்தனர் என்று பொலிஸ் தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன

இவர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டவர்கள் என்பதும் விசாரணை இன்றி நீண்டகாலமாக மறியலில் வைக்கப்பட்டுள்ளவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## றீகன் நகர் மண்டபத்தில் லெப். மனோவின் புகழுடல்

பூநகரியில் கடந்த செவ்வாயன்று சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக் கொண்ட லெப். பத்மசீலன்/மனோ (அழகையா காந்தரட்ணம் - புன்னைக் குடா வீதி, தளவாய், ஏறாவூர், மட்டக்களப்பு) எனும் வீர வேங்கையின் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக றீகன்நகர் மாவீரர் மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது.

## இளமருதங்குள கிராமத்தில் தையல் நிலையம் திறப்பு

வவுனியா பகுதி சேமமடு வட்டத்தில் உள்ள இளமருதங்குளத்தில் விடுதலைப் புலிகளின் மகளிர் அமைப்பினால் தையல் நிலையம்ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 10ஆம் திகதி மேற்படி தையல் நிலைய திறப்பு விழா நிகழ்வில் விடுதலைப் புலிகளின் வன்னி மாவட்ட தளபதி கபிலன் [யூட்], தமிழீழ காவல்துறை பொறுப்பாளர் நடேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். மேற்படி தையல் நிலைய தில் 25 ற்கு மேற்பட்ட பெண்கள் பயிற்சி பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

## ராஜீவை கொல்லசதிஎன்பது இந்தியாவுக்கு எதிர் அல்ல

### ராஜீவ் கொலை வழக்கில் வாதம்

(சென்னை)

ராஜீவ்காந்தி கொலை வழக்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்த போது நளினி உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் சிலர் சார்பாக ஆஜரான துரைசாமி என்ற சட்டத்தரணி புதிய விடயங்களை முன்வைத்து வாதாடினார்.

சிறப்பு புலனாய்வு குழுவினால் தயாரிக்கப்பட்டு மத்திய புலனாய்வு துறையால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை சட்டபூர்வமானதல்ல என வாதாடிய அவர் இதற்கு காரணம் வழக்கை விசாரிக்குமாறு சிறப்பு விசாரணைக் குழுவை மத்திய அரசோ, மாநில அரசோ உத்தியோகபூர்வமாக கோரவில்லை என சுட்டிக்காட்டினார்.

அடுத்து ராஜீவை கொல்ல சதி செய்யப்பட்டதாகவே குற்றப்பத்திரிகையின் வாசகம் கூறுகிறது. எனவே இது தனி நபருக்குஎதிரான சதியேயன்றி இந்தியாவிற்கோ, இந்திய மக்களுக்கோ எதிரானதல்ல. எனவே குற்றவாளிகளை தடாசட்டத்தில் தடுத்து வைக்க முடியாது என்றும் வழக்கறிஞர் வாதாடினார்.

விசாரணையை நீதிபதி அடுத்த வியாழன்வரை ஒத்தி வைத்தார்.

## தேர் திருவிழா

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறும். நாளை தீர்த்தத் திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். மகோற்சவகாலத்தில் தினமும் பிற்பகலில் ஆறு. திருமுருகன் (ஆசிரியர்) அவர்களால் பெரியபுராண தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

### ரவை வெடித்து ஒருவர் காயம்

(தொல்புரம்)

துப்பாக்கி ரவை அடுப்பினுள் வெடித்ததினால் வயோதிப மாது ஒருவர் கால்களிலும், கைகளிலும் காயமுற்ற நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் தொல்புரம் மத்தி. சின்னம்மன் கோவிலடியைச் சேர்ந்த குமரேசு தவமணி (வயது 68) என்பவர் கிடாரத்தில் வெந்நீர் கொதி

## அத்துலத்முதலி கொலை தொடர்பாக 9பேர் கைது

[கொழும்பு]

முன்னாள் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் லலித்அத்துலத் முதலியின் கொலை தொடர்பாக மேலும் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக சிறிலங்கா பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக்கொலையைச்செய்தவர் என சந்தேகிக்கப்படும் கந்தையா ரகுநாதன் என்பவருடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவர்களாகக் கருதப்படும் ஐபாக்கண்ணு சக்திவேல், பேதுருப்பிள்ளை ஜெபநேசன் ஆகிய இருவரையும் மேலும் ஏழு பேரையும் தாம் கைது செய்துள்ளதாக இவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

### எறிகணை வீச்சு வீடு சேதம்

[தொல்புரம்]

காரைநகர் கரையோரக் காவல் நிலைகளிலுள்ள சிறிலங்கா ஆயுதப் படையினர் தமது காவல் அரண்களிலிருந்து மேற்கொண்ட அகோர எறிகணை வீச்சினால் சுழிபுரம் பகுதியில்வீடுஒன்றுபலத்தசேதமுற்றது.

(41)

### உடுகம்பொல தமிழ் நாட்டில்?

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல தமிழ் நாட்டில் தலைமறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா அரசுக்கும் அவருக்கும் ஒரு சுமுக ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதை அடுத்து விரைவில் உடுகம்பொல கொழும்பு திரும்புவார் என்று அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலைப்படை ஒன்றை வைத்திருந்ததாகவும், தேர்தலில் பல முறைகேடுகள் செய்ததாகவும் உடுகம்பொல பகிரங்க அறிக்கை வெளியிட்டது தெரிந்ததே.

## ரணில் விக்கிரமசிங்கா இந்தியா விஜயம்

[கொழும்பு]

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ள தற்போது பாரிஸ் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அங்கிருந்து திரும்பும் வழியில் இந்தியாவுக்கும் செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவை சந்திப்பார்.

இந்திய – சிறிலங்கா பிரதமர்களிடையிலான பேச்சுவார்த்தைகள் அநேகமாக 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. பிரதமர் ரணில் 23ஆம் திகதி கொழும்பு வந்து சேர்வார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவின் பின்னர் சிறிலங்காவின் புதிய அரசின் பிரதமர் இந்தியா செல்வது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது

### மன்னார்

அக்கிராம மக்கள் குடியிருப்புக்கள் மீது நான்கு குண்டுகளை வீசின.

இதைத் தொடர்ந்து காலை

### கப்பல்

மாரும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கப்பல் மூலம் செல்வதாயின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டுமெனவும் தெரியவருகின்றது

(சி). (பா)

## அ.தி.மு.க.பொது செயலாளர் பதவிக்கு 24இல் தேர்தல்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தல் இம்மாதம் 24 ஆம் திகதி நடத்தப்படும் என்று தமிழக முதல் வரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான ஜெயலலிதா அறிவித்துள்ளார். ஏனைய பதவிகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதியும், 9 ஆம் திகதியும், 18 ஆம் திகதியும் நடத்தப்படும் எனவும் அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்தோர்

## நியமனம் வழங்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்காலிக எழுதுவினைஞர் போட்டிப் பரீட்சையில் சிதத்தியடைந்தவர்கள் தமக்கு நியமனம் வழங்கும்படி கோரி யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் நிலவும் எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் போட்டிப் பரீட்சை ஒன்று நடைபெற்றது. இப் பரீட்சையில் 304 பேர் சித்தியடைந்தனர்.

சித்தியடைந்த 304 பேரில் 200 பேருக்கு ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் சுமார் 600 எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

மிகுதியாக உள்ளவர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு உதவும்படி இம் மகஜரில் அரச அதிபருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

## வாக்கு மூலம் பெற்றவருக்கு தமிழ் தெரியாது

### வழக்கில் எதிரி விடுதலை

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கல்முனை அதிரடிப் படை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பதிவுசெய்ய

அதிரடிப்படை முகாம் பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியம் அளிக்கையில் தாம் எதிரி தமிழில் கூறியதை சிங்களத்தில் மொழி பெயர்த்த

க்கு நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தபோது நளினி உட்பட குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் சிலர் சார்பாக ஆஜரான துரைசாமி என்ற சட்டத்தரணி புதிய விடயங்களை முன்வைத்து வாதாடினார்.

சிறப்பு புலனாய்வு குழுவினால் தயாரிக்கப்பட்டு மத்திய புலனாய்வு துறையால் சமர்ப்பிக்கப்பட்ட குற்றப்பத்திரிகை காரணம் வழக்கை விசாரிக்குமாறு சிறப்பு விசாரணைக் குழுவை மத்திய அரசோ, மாநில அரசோ உத்தியோகபூர்வமாக கோரவில்லை என சுட்டிக்காட்டினார்.

அடுத்து ராஜீவை கொல்ல சதி செய்யப்பட்டதாகவே குற்றப்பத்திரிகையின் வாசகம் கூறுகிறது. எனவே இது தனிநபருக்குஎதிரான சதியேயன்றி இந்தியாவிற்கோ, இந்திய மக்களுக்கோ எதிரானதல்ல. எனவே குற்றவாளிகளை தடாசட்டத்தில் தடுத்து வைக்க முடியாது என்றும் வழக்கறிஞர் வாதாடினார்.

விசாரணையை நீதிபதி அடுத்த வியாழன்வரை ஒத்திவைத்தார்.

முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் உடுகம்பொல தமிழ் நாட்டில் தலைமறைவாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சிறிலங்கா அரசுக்கும் அவருக்கும் ஒரு சுமுக ஒப்பந்தம் ஏற்பட்டிருப்பதை அடுத்து விரைவில் உடுகம்பொல கொழும்பு திரும்புவார் என்று அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா கொலைப்படை ஒன்றை வைத்திருந்ததாகவும், தேர்தலில் பல முறைகேடுகள் செய்ததாகவும் உடுகம்பொல பகிரங்க அறிக்கை வெளியிட்டது தெரிந்ததே.

# தேர் திருவிழா

ஆனைக்கோட்டை மூத்த நயினார் கோவில் தேர்த்திருவிழா இன்று நடைபெறும். நாளை தீர்த்தத் திருவிழாவும், ஞாயிற்றுக்கிழமை பூங்காவனத் திருவிழாவும் நடைபெறும். மகோற்சவகாலத்தில் தினமும் பிற்பகலில் ஆறு. திருமுருகன் (ஆசிரியர்) அவர்களால் பெரியபுராண தொடர் சொற்பொழிவு நடைபெற்று வருகிறது.

## ரவை வெடித்து ஒருவர் காயம்

(தொல்புரம்)

துப்பாக்கி ரவை அடுப்பினுள் வெடித்ததினால் வயோதிப மாது ஒருவர் கால்களிலும், கைகளிலும் காயமுற்ற நிலையில் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் இரவு 7-30 மணியளவில் தொல்புரம் மத்தி, சின்னம்மன் கோவிலடியைச் சேர்ந்த குமரேசு தவமணி (வயது 68) என்பவர் கிடாரத்தில் வெந்நீர் கொதிக்க வைக்கையில் விறகுகட்டையில் ஏற்கனவே பாய்ச்சப்பட்டிருந்த துப்பாக்கி ரவை ஒன்று கட்டையில் நெருப்புப் பிடித்தவுடன் வெடித்துச் சிதறியதால் இரு கால்களிலும். கைகளிலும் படுகாயமுற்ற நிலையில் மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (41)

# ரணில் விக்கிரமசிங்கா இந்தியா விஜயம்

[கொழும்பு]

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மாநாட்டில் கலந்து கொள்ள தற்போது பாரிஸ் சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா அங்கிருந்து திரும்பும் வழியில் இந்தியாவுக்கும் செல்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது. அவர் புதுடில்லியில் இந்தியப் பிரதமர் நரசிம்மராவை சந்திப்பார்.

இந்திய – சிறிலங்கா பிரதமர்களிடையிலான பேச்சுவார்த்தைகள் அநேகமாக 22ஆம் திகதி நடைபெறவுள்ளது. பிரதமர் ரணில் 23ஆம் திகதி கொழும்பு வந்து சேர்வார்.

ஜனாதிபதி பிரேமதாசாவின் மறைவின் பின்னர் சிறிலங்காவின் புதிய அரசின் பிரதமர் இந்தியா செல்வது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது

## மன்னார்

அக்கிராம மக்கள் குடியிருப்புக்கள் மீது நான்கு குண்டுகளை வீசின.

இதைத் தொடர்ந்து காலை 10.30 மணியளவில் முருங்கன் பகுதிக்கு வந்த இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் அந்த நான்கு குண்டுகளைப் போட்டன. இதனால் அப்பகுதியில் நின்ற மூன்று துவிச்சக்கர வண்டிகள் முற்றாக சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

## கப்பல்

மாரும் செல்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் கப்பல் மூலம் செல்வதாயின் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் நேரடியாகத் தொடர்பு கொள்ள வேண்டுமென வும் தெரியவருகின்றது

(சி). (பா)

## உறவினர்

வானொலிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்துள்ளனர்

இக்கைதிகள் மேலும் தெரிவிக்கையில், இன்னும் இரு தினங்களில் நீர் அருந்துவதை நிறுத்திவிடுவோம். எங்கள் உயிரைப்பற்றித் தீர்மானிக்க இன்னும் இரண்டு நாட்களே உள்ளன இதுவரை பதில் சொல்ல வேண்டியவர்களிடம் இருந்து எந்தவிதமான செய்தியும் கிடைக்கவில்லை. இதனையிட்டு நாம் மிகுந்த வருத்தப்படுகின்றோம் என்று தெரிவித்தனர்.

எங்களை விடுதலை செய்வதாகஅரசுபத்திரிகைகளில் கூறுவது வெறும் வாய்ப்பேச்சு மட்டுமதான் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

## பாதிக்கப்

கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பாதிக்கப்பட்டோர் மேற்கண்டவாறு தாம் பாதிப்புற்றமையை நிரூபிக்க உரிய உதவி அரசாங்க அதிபரின் அத்தாட்சியுடன் சமுகமளிக்கும்படி யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

(41)

# அ.தி.மு.க.பொது செயலாளர் பதவிக்கு 24இல் தேர்தல்

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தல் இம்மாதம் 24 ஆம் திகதி நடத்தப்படும் என்று தமிழக முதல்வரும் அக்கட்சியின் பொதுச் செயலாளருமான ஜெயலலிதா அறிவித்துள்ளார். ஏனைய பதவிகளுக்கான தேர்தல்கள் எதிர்வரும் ஜூலை 7ஆம் திகதியும், 9 ஆம் திகதியும், 18 ஆம் திகதியும் நடத்தப்படும் எனவும் அவரது அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

எழுதுவினைஞர் பரீட்சையில் சித்தியடைந்தோர்

# நியமனம் வழங்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தற்காலிக எழுதுவிளைஞர் போட்டிப் பரீட்சையில் சிததியடைந்தவர்கள் தமக்கு நியமனம் வழங்கும்படி கோரி யாழ். அரசாங்க அதிபரிடம் மகஜர் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் நிலவும் எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1991 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் போட்டிப் பரீட்சை ஒன்று நடைபெற்றது. இப் பரீட்சையில் 304 பேர் சித்தியடைந்தனர்.

சித்தியடைந்த 304 பேரில் 200 பேருக்கு ஏற்கனவே நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களில் சுமார் 600 எழுதுவினைஞர் பதவி வெற்றிடங்கள் உள்ளதாகத் தெரிய வருகின்றது.

மிகுதியாக உள்ளவர்களுக்கும் நியமனம் வழங்குவதற்கு உதவும்படி இம் மகஜரில் அரச அதிபருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

# வாக்கு மூலம் பெற்றவருக்கு தமிழ் தெரியாது

வழக்கில் எதிரி விடுதலை

குற்ற ஒப்புதல் வாக்குமூலம் ஒன்றை கல்முனை அதிரடிப் படை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவர் பதிவுசெய்ய உதவி பொலிஸ்காரர்களுக்கு தமிழ் தெரியாது என்று எடுத்துக்காட்டப்பட்டதையடுத்து பயங்கரவாதத் தடைச்சட்ட வழக்கொன்றில் எதிரி விடுதலையானார். பெரிய நீலாவணையை சேர்ந்த வடிகுமார குலசிங்கம் (வயது 33) என்பவரே இவ்வாறு விடுதலையானார்.

விசாரணையின் போது சாட்சியமளித்த கல்முனை அதிரடிப்படை முகாம் பொலிஸ் கான்ஸ்டபிள் சாட்சியம் அளிக்கையில் தாம் எதிரி தமிழில் கூறியதை சிங்களத்தில் மொழி பெயர்த்ததாகக் கூறினார். அப்போது சட்டத்தரணி மேற்படி சாட்சிக்கு தமிழ் சம்பந்தமாக கூடுதலாக எதுவும் தெரியாதுஎன்று விசாரணையின் போது கூறியிருந்தார் என்றார்.

## பங்கீட்டு அட்டை

"வலிகாமம் வடக்குப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் 1993 ஆடி மாதத்திலிருந்து வழங்கப்படவிருக்கும் மண்ணெண்ணெய், சீனி போன்ற பொருள்கள் சம அளவில் அனைத்துக் குடும்பங்களும் பெற்றுக் கொள்வதற்கென புதிதாகப் பங்கீட்டு அட்டை அவ்வப்பகுதி கிராம உத்தியோகஸ்தர்களால் விநியோகிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்பமும் ரூபா 5/- ரொக்கமாகச் செலுத்தி பங்கீட்டு அட்டையைப் பெறுமாறு வலி வடக்குப் பிரதேச செயலர் கேட்டுக் கொள்கிறார்.

## வீரச்சாவு

இவரது வித்துடல் இன்று முற்பகல் 10.00 மணிக்கு யாழ். வண்ணார்பண்ணை திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில்அமைக்கப்பட்டவிசேட மேடையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு; அஞ்சலிக் கூட்டம் நடாத்தப்பட்டு அங்கிருந்து அணிவகுப்பு மரியாதைகளுடன் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

## சனி, ஞாயிறு திறந்திருக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைகள் சனி, ஞாயிறு தினங்களில் முழுமையாக வியாபாரத்திற்காகத்திறந்திருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.


யாழ்நகர்

ஸ்ரீதர் திரையரங்கில்

3-வது வெற்றிவாரமாகவும்

சாவகச்சேரி

தெய்வேந்திரா

திரையரங்கிலும்

"இது எங்கள் தேசம்"

(சி/6846)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.